பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 24 வியாழக்கிழமை 09.08.2018 கதிர் 277

**இனிது ரகசியம் அல்ல!**

ஓரிரு வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் நடந்த சம்பவம் இது.

நாடாளுமன்ற அமர்வுக்காக சபைக்குள் நுழைந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவை, முன் வரிசையில் அமர்ந்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த பக்கம் 03

# தமிழகமே கண்ணீர்க் கடலில் மூழ்க விடைபெற்றார் கலைஞர் கருணாநிதி

## இராணுவ மரியாதையுடன் மெரீனா கடற்கரையில் உடல் நல்லடக்கம்

சென்னை, ஓக.09

மறைந்தகலைஞர்கருணாநிதியின் உடல், முப்படை வீரர்களின் 21 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் மெரீனாவில்உள்ள அண்ணா சமாதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பொதுமக்கள் அஞ்சலிக்காக ராஜாஜி அரங்கில் வைக்கப்பட்டிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பூதவுடல் மாலை 4 மணியளவில் இராணுவ வாகனத்தில் ஏற்றப்பட்டு ஊர்வலமாக அண்ணா சமாதிக்குக் கொண்டு வரப்பட்டது.

சுமார் இரண்டரை மணி நேரத்துக்கும் மேலாக கருணாநிதியின் இறுதி ஊர்வலம் நடந்தது. மக்களின் கண்ணீர்க் பக்கம் 14



# புலம்பெயர் தமிழ் மக்களே மீண்டும் நாடு திரும்புங்கள்!

## சபையில் பிரதமர் ரணில் பகிரங்க அழைப்பு; உதவிகள் வழங்கத் தயாரெனவும் அறிவிப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 09

போர்க் காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்கள் அனைவரும் - குறிப்பாக தமிழ் மக்கள் மீண்டும் நாடு திரும்பவேண்டும். அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு நல்லாட்சி அரசு எப்போதும் தயாராகவுள்ளது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் பகிரங்க அழைப்பொன்றை விடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக்கம் 14

## கலைஞரின் மறைவு பேரிழப்பு மனதில் துயரை உணர்ந்தேன்

**இரா. சம்பந்தன் உருக்கம்**



கொழும்பு, ஓக.09

முதுபெரும் தமிழறிஞர், உலகத் தமிழர்களின் உன்னதமான பக்கம் 14

## வடக்கு வீட்டுத் திட்டம் குறித்து சம்பந்தனுடன் பேசுவார் ரணில்

கொழும்பு, ஓக.09

வடக்கில்வீட்டுத்திட்டம்அமைப்பதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுடன் விரைவில் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதாகப் பிரதமர் பக்கம் 03

## ரயில் சேவைகள் முடங்கின; கொழும்பில் பெரும் பதற்றம்



கொழும்பு, ஓக.09

கொழும்பில் ரயில் சேவை பணிப் புறக்கணிப்புக் காரணமாக பக்கம் 14

## பொலிஸாருடன் இளைஞர்கள் இணைந்து அராலியில் ரோந்து

**நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்**

யாழ்ப்பாணம், ஓக.09

வட்டுக்கோட்டை - அராலி பகுதியில் குடியிருப்புகளுக்குள் பக்கம் 14

## சரவணபவன் — சயந்தன் நேற்று அராலியில் கடும் வாய்த்தர்க்கம்

யாழ்ப்பாணம், ஓக.09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனுக்கும் இடையே நேற்று அராலியில் கடும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. பக்கம் 14

## பெரும் தலைவர் கருணாநிதிக்கு செல்வம், மனோ நேரில் அஞ்சலி



சென்னை, ஓக.09

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவருமான கருணா பக்கம் 14



## நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக ஞானசாரருக்கு 6 ஆண்டுகள் கடூழியம்

**மேன்முறையீட்டு மன்று நேற்றுத் தீர்ப்பு**

கொழும்பு,ஓக.09

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பாக பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. கலகொடஅத்தே ஞானசார பக்கம் 14

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நேரில் ஆஜராக விக்கி, அனந்தி, சிவனேசனுக்கு அழைப்பாணை

## ஏன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறும் உத்தரவு

கொழும்பு, ஓக.09

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி நீதிமன்றில் நேரில் முன்னிலையாகுமாறு வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர்கள் அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோருக்கு அழைப்பாணை பிறப்பிக்கக் கட்டளை பிறப்பித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப் பக்கம் 03

காலைக்கதிர் Kalaikkathir



# கருணாநிதியின் மறைவுக்கு தமிழில் இரங்கல் தெரிவித்த ஜனாதிபதி !



உடல் நலக்குறைவால் நேற்றுமுன்தினம் மாலை மரணமடைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி குடும்பத்தினருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுதாபம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் -

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் மூத்த அரசியல் தலைவருமான மு.கருணாநிதி அவர்களின் மறைவுச் செய்தி என்னை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், ஆதரவாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கொள்கிறேன் என அவர் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் தமிழக கருணாநிதியின் மறைவுக்கு வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் இரங்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் தமிழ்க் கூறும் நல்லுலகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது என வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் மறைவையொட்டி வடக்கு முதலமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கலைஞர் கருணாநிதி அவர்கள் தனது 94வது அகவையில் முதுமையின் நியதிக்கு ஏற்பவே காலமாகியுள்ளார். எனினும் அவர் தமிழ் மக்களின் கருத்தியலிலும், தமிழக அரசியலிலும், தமிழ்க் கலை இலக்கியத்திலும் ஆற்றிய மகத்தானபணிகளும் நிகழ்த்திய சாதனைகளும் அவரை மறக்க முடியாத மனநிலைக்கு எம்மை ஆழ்த்தியுள்ளன.

கலைஞர் கருணாநிதி அவர்கள் சுமார் 60ஆண்டுகாலம் தொடர்ந்து மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர். 5 தடவைகள் முதலமைச்சராகப் பதவிவகித்துள்ளார். இது சாதாரணமான ஒரு நிகழ்வல்ல. நவீன இந்திய அரசியல் வரலாற்றில் இவருக்கு தனித்துவமான ஒரு வரலாறு அமையும் என்று எதிர்பார்க்கலாம்.



கலைஞர் கருணாநிதி தனது ஆட்சிக்காலத்தில் சமூக நீதியின் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கிக் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் அடித்தட்டு மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தார்.

அரசுப் பணிகளில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லை என்று நம்புகின்றேன். இந்தியாவில் முதன் முறையாக பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தையும் நிறைவேற்றினார் கலைஞர் அவர்கள்.

கலைஞர் கருணாநிதி 1956 இல் சிதம்பரத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டில் 'இலங்கையில் தமிழர்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்திருந்தார்.

**எம் மக்களின் ஆதங்கம்**

அன்றில் இருந்து இலங்கைத் தமிழர்களுக்காக அவர் எத்தனையோ போராட்டங்களை முன்னெடுத்திருந்தார். எனினும், முள்ளிவாய்க் காலில் தமிழ் இனஅழிப்பு யுத்தம் உக்கிரம் பெற்றிருந்த போது கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்குக் கூடுதல் அழுத்தம் கொடுத்து அழிவைத் தடுத்திருக்க முடியும் என்ற ஆதங்கம் எம் மக்கள் மத்தியில் இன்றும் உண்டு.

தன் வாழ்வைத் தமிழர் வரலாற்றின் அத்தியாயங்களாக பதிவு செய்து விட்டு மறைந்துள்ள கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் என் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் அவரது இலட்சோபலட்சம் தொண்டர்களுக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கன்னியாகுமரியில் வானுயர அமைந்திருக்குந் திருவள்ளுவர் சிலைபோன்று அவர்பெயரும் காலாகாலத்துக்கும் நிலைத்திருக்க இறைவன் அருள் புரிவானாக என முதலமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

# கலைஞர் கருணாநிதியின் உடலுக்கு இ.தொ.காவினர் நேரில் அஞ்சலி





தமிழகத்தின் மறைந்த முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவர் கருணாநிதியின் உடலுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நேற்று நேரில் அஞ்சலி செலுத்தியது.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் உடல் சென்னையில் ராஜாஜி அரங்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், அரசியல் கட்சியினர், திரைத்துறையினர் என பலரும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தலைவரும், பொது செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் மற்றும் மத்திய, ஊவா மாகாண அமைச்சர்களான எம்.ரமேஷ்வரன், செந்தில் தொண்டமானுடன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.இராஜதுரை ஆகியோர் நேரில் சென்று கருணாநிதியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# கருணாநிதியின் மறைவுக்கு மஹிந்த, நாமல் இரங்கல்!





மறைந்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சருக்கு பல்வேறு அரசியல் பிரமுகர்களும் இரங்கல் தெரிவித்துவரும் நிலையில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தனது இரங்கலை தமிழில் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் சமூக வலைத்தளத்திலேயே அவர் இந்த இரங்கல் வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் மறைவை அறிந்து துயருற்றேன். தமிழ் இலக்கியத்துக்கும் சினிமாவுக்கும் அரசியலுக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் இணையற்றவை. என்று அவர் தனது இரங்கலைப் பகிர்ந்துள்ளார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவும் தனது இரங்கலை தமிழில் வெளியிட்டிருக்கிறார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி அவர்களின் மறைவு தமிழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன். அவரது குடும்பத்தினருடனும், தமிழக மக்களுடனும் எனது ஆழ்ந்த இரங்கலை பகிர்ந்து கொள்கிறேன் எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இறுதி யுத்த காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது தமிழகத்தின் முதலமைச்சராக கலைஞர் கருணாநிதியே பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது..

# கருணாநிதியின் மறைவு குறித்து அமைச்சர் திகாம்பரம் இரங்கல்!

தமிழ் கூறும் நல்லுலகத்தின் தலைமகனான கலைஞர் கருணாநிதியின் மறைவு தமிழகத்துக்கு பேரிழப்பு என்றாலும் கன்னித் தமிழ் உள்ள வரை அவரின் புகழ் காலமெல்லாம் நிலைத்திருக்கும் என மலை நாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பி. திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதியின் மறைவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இந்தியாவில் உள்ள மூத்த அரசியல் தலைவர்களில் பல்வேறு திறமைகளையும் ஆளுமையையும் பெற்றுள்ள ஒரே தலைவர் என்ற பெருமைக்கு உரிய கலைஞர் இலக்கியம், திரைப்படம், இயல், இசை, நாடகம் என முத்தமிழ் வித்தகராக ஓய்வின்றி உழைத்த ஒப்பற்ற மூத்த அறிஞராவர்.

பெரியாரின் பாசறையில் வளர்ந்து அண்ணாவின் அரவணைப்பில் அனுபவம் பெற்று தமிழ்த் தாய்க்கு அளப்பரிய தொண்டுகளைச் செய்து ஏராளமான நூல்களை படைத்துள்ளார். உலகெங்கும் வாழ்கின்ற கோடிக் கணக்கான தமிழ் நெஞ்சங்களில் அவர் இடம் பிடித்துள்ளார். என்று அமைச்சர் பி.திகாம்பரம் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

# மனோ எமக்கு அறிவுரை கூற வேண்டிய அவசியம் இல்லை: துரைராசசிங்கம்!

அமைச்சர் மனோ கணேசன் வடக்கு, கிழக்கிற்கு வந்து எமக்கு அறிவுரை கூறவேண்டிய அவசியமில்லை என இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மனோகணேசன் வடக்கு கிழக்கிற்கு சென்று அறிவுரை கூறுவது மற்றும் அரசியல் நிலைமையை குழப்புவது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்து தமிழர்கள் வாழும் ஏனைய இடங்களில் போட்டியிடுவது தொடர்பான முடிவை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்க முடியும்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மனோகணேசன் சந்தித்த நெருக்கடிகள் பலவற்றை சுமந்திரன் தீர்த்து வைத்தார். அது குறித்து மனோகணேசன் தெரிவிக்க வேண்டும்.

அத்துடன், புதிய அரசமைப்பு உருவாவது உறுதி. கூடுதலான அதிகாரத்துடன் அரசமைப்பு வருகின்ற போது அதனை மக்களிடம் எடுத்துச்செல்ல நாங்கள் தயார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# என்னிடம் ஆயுதம் இருக்கிறதா? பொலிஸ் மூலம் விசாரியுங்கள்

## அவைத் தலைவரிடம் கோருகிறார் அனந்தி

யாழ்ப்பாணம், ஓக.09

என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா? இல்லையா? என்பதை சாவகச்சேரிப் பொலிஸாரின் ஊடாகத் தகவல்களைப் பெற்றுச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு நான் அவைத் தலைவரிடம் கடிதம் மூலமாக கோரிக்கையொன்றை முன்வைக்கப்போகின்றேன் என வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் வெளியிட்ட கருத்தானது தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஆபத்து என்றும், இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் அனந்தி சசிதரன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார்.

இந் நிலையில் இது தொடர்பாக நேற்றுச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்த அமைச்சர் அனந்தி சசிதரன் அதன் பின் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

1987 ஆம் ஆண்டு மாகாண சபைச் சட்டத்தின் பிரகாரம் சபையில் நடக்கும் விவகாரங்களுக்குப் பொலிஸாரோ நீதிமன்றமோ நடவடிக்கை எடுக்க முடியாது என்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை அவைத் தலைவர் பொலிஸாரிடம் வழங்கியுள்ளார். இதன் பிரகாரம் தம்மால் நடவடிக்கை எடுக்க முடியாது என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நான் நினைக்கின்றேன் அவைத்தலைவர் என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்த ஒரு கோரிக்கையை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் முன்வைப்பாராக இருந்தால் அது தொடர்பான விசாரணைகளை அவர்கள் செய்யத் தயாராக இருப்பார்கள்.

எனவே அடுத்த கட்ட நடவடிக்கையாக என்னிடம் ஆயுதம் இருக்கின்றதா? அல்லது இல்லையா? என்பதை சாவகச்சேரி பொலிஸாரினூடாகத் தகவல்களைப் பெற்றுச் சபைக்கு சமர்ப்பிக்குமாறு நான் அவைத் தலைவரிடம் கடிதம் மூலமாக கோரிக்கையொன்றை முன்வைக்கப்போகின்றேன் – என்றார். (ஐ-7)

# தப்பிய கைதிகளில் இரண்டு பேர் கைது

முல்லைத்தீவு, ஓக.09

முல்லைத்தீவில் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது, தப்பிச் சென்ற நான்கு கைதிகளில் இருவர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த நால்வர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் தப்பிச் சென்றிருந்தனர்.

இவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இரண்டு கைதிகளையும் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் கூறினர்.

தப்பிச் சென்ற சந்தேகநபர்களில் ஒருவர் கொலைக்குற்றச்சாட்டு தொடர்பிலும் மற்றுமொருவர் வீடுடைப்பு தொடர்பிலும் ஏனைய இருவரும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பிலும் கைது செய்யப்பட்டிருந்தனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

# திருமலை மீனவர் போராட்டம்



திருமலை, ஓக.09

திருகோணமலை மாவட்ட மீனவர்களினால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை பொது மீனவர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

தடை செய்யப்பட்ட மீன்பிடித் தொழில் முறைகளை உடனடியாக அரசு நிறுத்த வேண்டும், அதிகரிக்கப்பட்ட மண்ணெண்ணெய் விலை உடனடியாக குறைக்கப்படவேண்டும், அனைத்து மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளும் உடன் தீர்க்கப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மணிக்கூண்டு கோபுரத்திற்கு முன்பாக கூடி கோசம் எழுப்பிய மீனவர்கள், பேரணியாகச் சென்று மாகாணக் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

### நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக்காக அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணங்களை நீதிமன்றிற்குத் தெரிவிக்கும்படியும் உத்தரவிட்டது.

டெனிஸ்வரன் தாக்கல் செய்திருந்த மூல வழக்கையும், நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு வழக்கையும் நேற்று ஒன்றாக எடுத்த மேல் முறையீட்டு நீதியரசர்கள், குமுதினி விக்கிரமசிங்க, ஜனக் டி சில்வா ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த உத்தரவை விடுத்தது.

தாம் மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தவறு என உத்தரவிடக்கோரி இந்த மூல வழக்கை டெனிஸ்வரன் தாக்கல் செய்திருந்தார் என்பதும் –

அவர் இதுவரை சட்டரீதியாக அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை என்று கருதுகிறார் எனத் தெரிவித்த நீதிமன்றம், ஆகவே அவர் அப்பதவியில் தொடர்வதற்கு எந்த இடையூறும் ஏற்படுத்த வேண்டாம் என இடைக்கால உத்தரவிட்டிருந்தது என்பதும் – தெரிந்தவையே.

எனினும் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பல வாரங்களாகியும் தாம் தமது பணியைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை, அது நீதிமன்ற உத்தரவை அவமதிக்கும் நடவடிக்கை எனக் குறிப்பிட்டு டெனிஸ் வரன் பிறிதொரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கை கடந்த 31ஆம் திகதி தாக்கல் செய்திருந்தார்.

தாம் வகித்த அமைச்சர் பதவியின் பொறுப்புக்களை இப்போது பகிர்ந்து ஏற்றுக் கொண்டிருக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரன், அமைச்சர்கள் அனந்தி சசிதரன், சிவநேசன் ஆகியோரை அவர் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த திங்களன்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்த்தரப்பின்றி ஒரு தலைப்பட்சமாக விசாரித்த இதே நீதிமன்ற ஆயம், எதிர்த்தரப்பினருக்கு நேரில் பிரசன்னமாவதற்கான அழைப்பாணை விடுப்பதா என்பது பற்றிய உத்தரவை இரண்டு நாள்களில் வழங்குவதாகத் தெரிவித்திருந்தது.

நேற்று மூலவழக்கையும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் நீதிமன்றம் ஒன்றாக எடுத்துக் கொண்டது.

மூலவழக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக் குமார், மூல வழக்கில் தமது ஆட் சேபனையைத் தாக்கல் செய்ய மேலும் கால அவகாசம் கோரினார். அதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அவருக்கு செப்ரெம்பர் 7ஆம் திகதி வரை கால அவகாசம் அளித்தமையுடன் அதுவரை அந்த வழக்கை ஒத்திவைத்தது.

அதேசமயம், அந்த வழக்கில் மனுதாரரான டெனிஸ்வரனுக்குச் சார்பாக வழங்கப்பட்டுள்ள இடைக் கால உத்தரவையும் செப்ரெம்பர் 10ஆம் திகதிக்கு நீதிமன்றம் நீடித்தது.

எனினும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எதிர்த்தரப்பினரான முதலமைச்சர் விக்னேஸ்வரனிட மிருந்து வழிகாட்டுதல் ஏதும் தமக்குக் கிடைக்காதமையால் தாம் அந்த வழக்கில் அவர் சார் பாக நீதிமன்றத்தில் தோற்றவில்லை என முதலமைச்சரின் சட்டத்தரணி லக்ஷ்மணன் ஜெயக் குமார் தெரிவித்தார்.

அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்த்தரப்பு இல்லாமல், மனுதாரர் தரப்பு வாதத்தை மட் டும் செவிமடுத்த பின்னர் ஒரு தலைப்பட்சமாக இந்த அழைப்பாணை மற்றும் ஏன் தண்டிக்கக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டக் கோரும் உத்தரவு ஆகியவற்றை விடுக்கும் முடிவுக்கு நீதிமன்றம் வந்துள்ளது என நீதியரசர்கள் தெரிவித்தனர்.

நேற்று மனுதாரர் டெனிஸ்வரன் தரப்பில் சட்டத்தரணி சுரேன் பெர் னாண்டோவும் ஐந்தாவது எதிர்மனுதாரான டாக்டர் சத்தியலிங்கத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும் ஆஜரா கினர். (உ)

# எம்.பிக்களின் சம்பளம் அதிகரிக்கப்படமாட்டாது

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓக.09

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு விவகாரம் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அவ்வாறான தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை என அரசு நேற்று அறிவித்தது.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அமைச்சரும், அமைச்சரவையின் இணைப்பேச்சாளருமான கயந்த கருணாதிலக இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நீதிபதிகளின் சம்பளத்தை உயர்த்தும்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தையும் உயர்த்தவேண்டும் எனக் கடந்த அரசின் காலத்தில்தான் தீர்மானிக்கப்பட்டது.

இந்தநிலையில், இதனைத் தான் கட்சித்தலைவர்கள் கூட்டத்தின்போது நாம் கலந்துரையாடினோம். ஆனால். அரசு அதன் நிலைப்பாட்டை தற்போது உறுதியாகத் தெரிவித்துவிட்டது.

அதாவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தச் சம்பள அதிகரிப்பை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனக் கூறியுள்ளதோடு, இது தொடர்பில் தன்னிடம் எந்தவொரு கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளார்.

ஆளும் தரப்பிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் சம்பள அதிகரிப்பு வேண் டாம் என ஏகமனதாகத் தீர்மானமும் எடுத்துள்ளோம். இதுவே அரசின் உறுதியான நிலைப்பாடாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் கூட சமர்ப்பிக்கப்படவில்லை – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ "டக்கி" என்று தமது ஆசனத்துக்கு அழைத்தார்.

நெருங்கிவந்த டக்ளஸ் தேவானந்தாவின் கையைப் பற்றிக் கொண்டு சரளமாகப் பேசத்தொடங்கினார் மஹிந்தர். முன்வரிசையில் அமர்ந்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கூட இந்த அந்நியோன்னிய உரையாடலைக் கூர்ந்து நோக்கினர்.

"*மல்லி! (தம்பி) இனி யாழ்ப்பாணத்திலும் நாங்கள் பழையபடி பெரிய கூட்டங்கள் போட வேண்டும். ஆள் திரட்ட வேண்டும். மக்கள் ஆதரவு பெற வேண்டும். அதற்கான வேலைகளைத் தொடங்க வேண்டும்*" – என்றார் மஹிந்தர்.

அதற்கு சாவகாசமாகவும் நிதானமாகவும் பதில் தந்தார் டக்ளஸ் தேவானந்தா.

"*நல்லது ஐயே...! அதைச் செய்யலாம். ஆனால் மக்களுக்கு என்ன சொல்லி கூப்பிடுவது? உங்களின் நிலைப்பாட்டை என்னவென்று வெளிப்படுத்தினால் தானே அதைக் கூறி மக்களை அணி திரட்டலாம். குறைந்த பட்சம் பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ளவற்றையாவது முதல் கட்டமாக நடைமுறைப்படுத்துவோம் என்பதற்கு உறுதி இருக்குமாயின் அதை மக்களிடம் எடுத்துச் செல்லலாம் என்பதுதான் எனது நிலைப்பாடு. அதுக்குப் பிறகு படிப்படியாக அடுத்த விடயங்கள் பற்றிப் பேசித் தீர்மானிக்கலாம். ஆகவே உங்கள் நிலைப்பாட்டை முதலிலை தெளிவுபடுத்துங்கள்!*" – என்றார் டக்ளஸ் தேவானந்தா.

"*ஓமோம்! இது குறித்து விரைவில் நாம் பேசி ஒரு முடிவு செய்வோம்*" – என்றார் மஹிந்தர்.

இது குறித்து சில அரசியல் அவதானிகளிடம் டக்ளஸ் தேவானந்தா பேசினார்.

"*அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டை சம்பந்தன் அல்லது விக்னேஸ்வரனுடன் செய்து கொள்வதற்குத்தான் தென்னிலங்கை பின்னடிக்கும். என்னுடன் அல்ல. நான் தென்னிலங்கையுடன் நல்ல நம்பிக்கையைக் கட்டி எழுப்பியுள்ளேன். எனது கைகள் மூலம் அதிகாரத்தை முதலில் பகிர்வதற்குத் தென்னிலங்கை மறுக்காது. எமது மக்களும் தென்னிலங்கைத் தரப்புகளும் இதனைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும். அரசு தரக் கூடிய சிறிய அதிகாரப் பகிர்வையேனும் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு எமது மக்கள் வாய்ப்பளிப்பார்களாயின் அந்த சொற்ப அதிகாரத்தை வானளாவ விரிவுபடுத்திக் காட்டுவேன்.*" – என்று உறுதியுடன் கூறுகின்றார் டக்ளஸ் தேவானந்தா.

தென்னிலங்கையை அளவுக்கு மீறி நம்புகின்றாரே டக்ளஸ் தேவானந்தா என்றே நான் சந்தேகப்படுகிறேன். நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகரே?

- மின்னல் -

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கில் வீட்டுத்திட்டம் முன்னெடுப்பது குறித்து அரசு சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது. வடக்கில் 50 ஆயிரம் வீடுகள் அமைப்பது குறித்து உரிய நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம்.

அதேபோல் மேலதிகமாக 25 ஆயிரம் வீடுகளை அமைக்கும் வேலைதிட்டங்களையும் கையாண்டு வருகின்றோம். விரைவில் சகல மக்களுக்கும் வீடுகள் வழங்கப்படும். அடிப்படைப் பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் தீர்ப்போம். இந்த நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுடன் விரைவில் பேச்சு நடத்தி தீர்வுகளைப் பெற்றுத்தருவது அரசின் பொறுப்பு – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உதிக்க மறுத்த உதயசூரியன்

தமிழகத்தில் ஓர் இமயம் சரிந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் மு.கருணாநிதி தனது 95 ஆவது வயதில் காலமானார்.

பல்லின, பன்மொழி, பல் சமூக இனத்தவர்கள் வாழும் பரந்த தேசத்தில் மாநில உரிமைகளுக்காகப் போராடிய ஒரு போராளி அவர். தன்னாட்சி உரிமைகளை வலியுறுத்தியவர். தேசியப் பிணக்குகளுக்குத் தீர்வு காண கூட்டாட்சி முறைமைக்கு உட்பட்ட சுயாட்சியை என்றும் வேண்டி நின்றவர். தமிழக அரசியலில் பிரகாசித்துக் கொண்டு இந்தியாவின் தேசிய

தான் நேரடியாகப் போட்டியிட்ட எந்தத் தேர்தலிலுமே தோற்காதவர் அவர். 1957 முதல் சுமார் அறுபது ஆண்டு காலம் மாநில சட்டசபை உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகித்து வந்திருக்கின்றார். இந்தக் காலகட்டத்தில் நடந்த பதின்மூன்று சட்டசபைத் தேர்தல்களிலும் வென்றிருக்கின்றார்.

ஐந்து தடவைகள் தமிழக முதல்வர் பதவியை வகித்தவர். ஐம்பது ஆண்டு காலம் தமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகக் கோலோச்சியவர். கடந்த ஒன்றரை ஆண்டுகளாக உடல் நலிவுற்ற காரணத்தினால் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தாராயினும், கடந்த எழுபது ஆண்டு கால தமிழக அரசியலில் பெரிதும் பரபரப்பை ஏற்படுத்திய தலைவராக விளங்கியவர் கருணாநிதி.

ஈ.வெ.ரா பெரியாரின் அடியையொற்றி நீதிக் கட்சியுடன் அரசியல் களம் புகுந்த இளைஞர் கருணாநிதி, சி.என். அண்ணாத்துரை வழியில் திராவிட முன்னேற்றக் கழக உருவாக்கத்தில் பங்கேற்று, கலைஞர் கருணாநிதியாக தமிழக அரசியலில் அசைக்க முடியாத சக்தியாக உயர்ந்தார்.

இந்த எழுபது ஆண்டு கால அரசியல் போராட்டத்தில் தமது திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உள்ளேயே பல அரசியல் எதிரிகளைக் கண்டவர். ஆனாலும் அந்த எதிரிகள் அனைவரையும் வெற்றிகரமாகப் புறமொதுக்கித் தனது தனித்துவமான ஆணை, கட்டுப்பாட்டுக்குள் கட்சியை வைத்திருந்தமையுடன் கிராம மட்டம் வரை செழுமையாக இயங்கும் கட்டமைப்பாகவும் அதை மாற்றியவர்.

அரசியலில் பல ஏறுமுகங்களையும் அதேசமயம் இறங்குமுகங்களையும் மோசமான பின்னடைவுகளையும் கண்ட போதும், அதனால் துவண்டு அடங்கியவர் அல்லர் கலைஞர் கருணாநிதி. ஒவ்வொரு பின்னடைவின் பின்னரும் தன்னை சுதாகரித்துக் கொண்டு எ ஃகுவாக – வலுவாக – துடிப்போடு – எழுந்து நின்றவர் அவர்.

ஈ.வெ.ரா. காலத்தில் அரசியலுக்குள் நுழைந்து, அண்ணாவை அடியொற்றி செயற்பட்டு, ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா எனப் பல மக்கள் தலைவர்களை அரசியல் களத்தில் கண்டவர்; பலமுறை வென்றவர்.

அரசியலுக்காகப் பல முறை சிறை சென்றவர். ஆனால், துவளாமல் தன் கொள்கைகளுக்காகப் போராடியவர்.

அரசியல் வானில் அவர் ஒரு விடிவெள்ளி – உதயசூரியன் – என்பதற்கு அப்பால் தமிழ்மொழிப் புலமையிலே பன்முக ஆளுமை பெற்றவர் அவர். சிறந்த இலக்கிப் படைப்பாளி. இலக்கிய உரைஞர். தமிழில் சொல்லாட்சியும் கருத்தாழமும் நிறைந்த பல நூல்களையும், கட்டுரைகளையும் சளைக்காமல், களைக்காமல் எழுதிக் குவித்தது அவர் பேனா.

'என் உயிரினும் மேலான...' என்ற கரகரப்பான தனது காந்தக் குரலால் தமிழகத்தையே ஆறு, ஏழு தசாப்தங்கள் கட்டிப் போட்டவர் கலைஞர். 'என் உடன் பிறப்பே!' என்ற மந்திரச் சொல்லால் தன் தொண்டர்களை ஆகர்ஷித்த கலைஞர் அதையே தமது தி.மு.கவின் அடையாளமுமாக்கினார்.

ஈழத் தமிழர்களின் அரசியலைப் பொறுத்தவரை நலிவுற்ற அந்த மக்களின் மீது என்றும் பரிவுற்றவராகச் செயற்பட்டவர் கலைஞர் கருணாநிதி.

ஆயினும், ஈழத் தமிழர் போராளி இயங்கங்களின் பல் திசைப் போக்குகளுக்குள் சிக்குண்டமையால் இந்த விடயத்தில் அவரின் அரசியல் செல்நெறி பலத்த விமர்சனங்களுக்கும் கண்டனங்களுக்கும் தீவிர எதிர்ப்புகளுக்கும் உள்ளாகத் தவறவில்லை. தமிழக மாநில மற்றும் இந்திய தேசிய அரசியலுக்கும், ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்ட போக்கிற்கும் இடையில் சிக்குண்டு பல முரண்பாட்டுக் கோலங்களையும் நெருக்கடிகளையும்எதிர்கொள்ளவேண்டியவரானார்கலைஞர்.

தமிழகத்தில் ஈழத் தமிழர் போராளிகள் இயக்கங்களின் செயற்பாடுகள் அல்லது அவற்றுக்குப் பரிவான போக்கில் கலைஞர் நடந்து கொண்டமையே அவரது மாநில அரசுகள் இரண்டு தடவைகள் நேரத்துடன் கலைக்கப்பட்டமைக்குக் காரணம் என்றும் கூறப்படுவதுண்டு.

எனினும் ஈழத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் தென்னிலங்கையின் ஈவு இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற, மனித குலத்துக்கே எதிரான யுத்தக் குற்றக் கொடூரங்கள் மூலம் மனிதப் பேரழிவாக நாசமாக்கபட்ட சமயத்தில் தமிழகத்தின் முதல்வராக இருந்தவர் கலைஞர் கருணாநிதி. அவரின் தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்த காங் கிரஸ் கட்சிதான் மத்தியில் ஆட்சியில் இருந்தது. மாநிலத்திலும், மத்தியிலும் கருணாநிதியின் அரசியல் செல்வாக்கு ஓங்கியிருந்த காலம் அதுவெனப் பலரும் கருதும் சூழல் இருந்தது.

தமிழின அழிப்பு முள்ளிவாய்க்கால் வரை மனிதப் பேரவலமாகக் கட்டவிழ்ந்த கோரத்தின்போது அதைத் தடுத்து நிறுத்துவதற்கு காத்திரமான பங்களிப்பைத் தனது அரசியல் செல்வாக்கு மூலம் ஆற்றத் தவறினார் கலைஞர் என்ற மன ஆற்றாமை ஈழத் தமிழர்களுக்கு என்றும் உண்டு.

ஆயினும், ஈழத் தமிழர்கள் உட்பட உலகத் தமிழர்கள் அனைவருக்குமாக என்றும் ஓங்கி ஒலித்த குரல் இன்று அடங்கி விட்டது. உதிக்க மறுத்து மறைந்தது உதயசூரியன்.

தமிழே – தமிழகமே – தன் வாழ்வாய் வாழ்ந்த ஒரு தலைவனின் மறைவு இது.

# விக்கியையும் எங்களையும் ஓரங்கட்டச் சிலர் சதி வலை



## கஜேந்திரகுமார் சீற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஓக 09

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனும் தமிழ் மக்களின் நலன்களுக்காக நேர்மையாகச் செயற்பட்டு வருவதால் இரு தரப்புக்கும் தலையிடியைக் கொடுத்து அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கான திட்டமிட்ட வேலைகளை எடுபிடிகள் செய்துவருகின்றனர்

இவ்வாறு குற்றம் சாட்டினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாண சபையின் நிலைமைகள் தொடர்பில் எங்களைப் பொறுத்தவரை பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அரசியலில் மக்களுக்காகச் செயற்பட வந்தவர்கள் தங்களது பதவிகள் சலுகைகளுக்காகச் சண்டை பிடிப்பவர்களாக இருக்கக்கூடாது. மக்கள் நலன்களை மட்டும் கருதிச் செயற்படுகின்றவர்களாகவே இருக்கவேண்டும்.

மாகாண சபையில் அமைச்சர் நியமனத்தில் ஏற்பட்ட பதவி தான் சட்டச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் எங்களது உறுப்பினருக்கு இடைக்காலத் தடை வந்தபோதே அவர் தன்னை விலக்கி வேறு ஒருவரை நியமிக்குமாறு எங்களிடம் கேட்டிருக்கின்றார். ஆனால் மாகாண சபையில் அவ்வாறு இல்லை. ஆகவே பதவிகள் சலுகைகளுக்காகச் செயற்படுபவர்களை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும்.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக மாகாண சபையில் இருக்கின்றவர்கள் செயற்படுகின்றனர். அதிலும் அவருக்குத் தலையிடியைக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவே பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சருக்கு எதிராக இப்போது டெனீஸ்வரன், முன்னதாக ஆர்னோல்ட். இவற்றுக்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்த கும்பல் என முதல்வருக்கு எதிராகவே பலரது செயற்பாடுகள் காணப்படுகின்றன.

ஆகவே இவ்வாறு முதல்வருக்குக் கொடுக்கும் தலையிடியை அவரும் விளங்கிக் கொள்ளவேண்டும். அடுத்த முறை புதுக்கட்சி உருவாக்கித் தேர்தலில் நிற்கவேண்டுமென்று விரும்பும் தரப்பென்ற வகையில் எங்கள் போன்ற நேர்மையான தரப்புக்களுடன் சேர்ந்து பயணிக்க முதலமைச்சர் முன்வர வேண்டும்.

முதலமைச்சருக்கும் எங்கள் கட்சிக்கும் எதிராகப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் இந்த இரண்டு தரப்புக்களும் நேர்மையாகத் தமிழ் மக்களின் நலன்களுக்காகச் செயற்படும் தரப்புக்கள் – என்றார்.

(ஐ – 7)

# நல்லாட்சியை ஆட்சிப்பீடமேற்றியதில் முஸ்லிம்களின் வகிபாகம் பெரியது

## கிழக்கு முன்னாள் முதல்வர் அறிக்கை



மட்டக்களப்பு, ஓக 09

நல்லாட்சி அரசை வெற்றி பெறச் செய்தவர்களில் மூன்றாவது சிறுபான்மைச் சமூகத்தின் பங்கு அளப்பரியதாக இருந்தது என்பதை உணராத நிலையில் நல்லாட்சி அரசு தற்போது நகர்வது கவலையளிப்பதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமத் தெரிவித்தார்

நல்லாட்சி அரசின் கலப்புத் தேர்தல் முறை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இந்த விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நம்பிக்கையற்று குழப்பங்களோடு இருந்த சிறுபான்மையினர் அந்தக் குழப்பகரமான அரசை மாற்றி நல்லாட்சி அரசை ஆட்சிபீடமேற்றினர். இதில் மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களின் வகிபாகம் பெரிதாக இருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசின் தற்போதைய போக்கு அந்த மூன்றாவது சிறுபான்மையினரான முஸ்லிம்களைத் தோற்கடிப்பதாக அமைந்திருக்கிறது.

நல்லாட்சி அரசு கலப்புத் தேர்தல் முறையை அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் மூன்றாவது சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்தை அரசியல் பிரதிநிதித்துவம் அற்றவர்களாக்குவதோடு அவர்களது இன்னபிற அரசியல் உரிமைகளையும் இல்லாதொழிப்பதாகவே அமைந்து விடும்.

இதுவொரு ஜனநாயக மறுப்பாகவும் நல்லாட்சியின் கொள்கை விரோதச் செயற்பாடாகவும் கருதிக் கொள்ளவும் வழியேற்பட் டுள்ளது.

கலப்புத் தேர்தல் முறையை மீண்டும் கொண்டு வருவது மாகாண சபையிலும், நாடாளுமன்றத் தேர்லில் முஸ்லிம் சமூக பிரதிநிதித்துவத்தை மிக மோசமாகக் குறைக்கக் கூடிய சாத்தியமுள்ளது.

மேலும், கலப்புத் தேர்தல் முறையை முதன் முதலாக கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அமுல்படுத்திப் பார்த்த அனுபவத்தின் மூலம் அது இந்த பல்லின சமூக நாட்டுக்கு நடைமுறையில் பொருந்தாது என்பதைக் கண்டுள்ளது இந்த நல்லாட்சி அரசு. கலப்புத் தேர்தல் முறையால் எந்தவொரு உள்ளூராட்சி மன்றமும் ஸ்திரமாக இல்லை என்பதைக் கண்டுணர்ந்து வருகின்றோம். அங்கு நிர்வாகம் சுமுகமாக இடம் பெறவில்லை.

ஆகவே இந்த கலப்பு முறைத் தேர்தல் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் அமுல்படுத்தப்படுமாக இருந்தால் இதே மாதிரியான தொங்கு இழுபறி நிலையே நிர்வாகத்தில் ஏற்படும். அதனால் மக்கள் நம்பிக்கை இழப்பார்கள்.

பழைய தேர்தல் முறை மாத்திரமே சிறுபான்மைச் சமூகங்கள் மற்றும் சிறு கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை உறுதிப் படுத்தக் கூடியது.

இந்த முழு நாடும் நம்பிக்கையை இழப்பதற்கு முன்பதாக நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை மீண்டும் கொண்டு வரக் கூடியதாக நல்லாட்சி நல்ல அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும். – என்றுள்ளது.

(ஐ)

### நாளை

10.08.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : பூசம் பி.இ 3.40 வரை
திதி : சதுர்த்தசி மு.இ 6.54 வரை
சுபநேரம் : 6.04 – 7.34 வரை
இராகுகாலம் : 10.34 – 12.04 வரை

## கடற்பரப்புகளில் காற்றின் வேகம் அதிகரிக்கும்!

நாட்டிலும் நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்புகளிலும் குறிப்பாக நாட்டுக்கு தென் கிழக்காகவும் வடமேற்காகவும் உள்ள கடற் பரப்புகளில் காற்றின் வேகம் குறிப்பிட்ட மட்டத்திற்கு அதிகரிக்கும் சாத்தியம் காணப் படுகிறது என வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

மத்திய மலைப் பிரதேசங்களிலும் ஊவா சப்ரகமுவ, வடக்கு, வடமத்திய, தெற்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் அவ் வப்போது மணித்தியாலத்திற்பு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின் றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ, மத்திய, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களி லும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின் றது.

## புலம்பெயர் சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுப்பதில் ஸ்ரீலங்கா ராணுவம் அதிக அக்கறை; தளபதி மகேஷ் சேனாநாயக்க

மேற்கு நாடுகளில் புலம்பெயர் இலங்கை சமூகத்தை இலங்கை யில் பெருமளவில் முதலீடுகளைச் செய்யக் கூடிய ஒரு பிரிவினராக நோக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க வலியுறுத்தினார்.

இந்த வருடத்திற்கான கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கிற்கான ஒழுங்குகள் தொடர்பில் விளக்க மளிப்பதற்காக கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

உள்நாட்டுப் போருக்குப் பின்ன ரான இன்றைய காலகட்டத்தில் வடக்கு



– கிழக்கில் பொது மக்கள் மதத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த இராணு வம் தொடர்ந்தும் செயற்பட்டு வரு கின்றது. கொழும்பு பாதுகாப்பு கருத் தரங்கு போன்ற நிகழ்வுகள் மூல மாக வெளிநாடுகளின் பாதுகாப்புத் துறை பிரதிநிதிகள் இலங்கை இராணு வத்தின் செயற்பாடுகள் குறித்த தகவல்களை புலம்பெயர் சமூகத் துக்கும் தெரியப்படுத்த முடியும்.

அவ்வாறு தெரியப்படுத்தும்போது இலங்கை குறித்து தவறான புரிதலு டன் இன்னமும் இருக்கும் புலம்பெயர் சமூகத்தின் பிரிவினரின் நம்பிக் கையை வென்றெடுக்க முடியும். அவ்வாறான நம்பிக்கை ஏற்படும் போது அந்தச் சமூகத்தில் தலை வர்களாக இருக்கும் கனிசமான பிரிவினர் இலங்கையில் முதலீடு களைச் செய்வதில் நாட்டம் காட்டு வர்.

அதற்கான சூழ்நிலையை ஏற்ப டுத்தும் நோக்கிலேயே பாதுகாப்பு கருத்தரங்கில் புலம்பெயர் சமூகத்து டன் தொடர்புடைய விவகாரத்தை ஆராய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கிளிநொச்சியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு பல்வேறு சமூகநலத் திட்டங்கள்

### இராணுவத்தினரால் முன்னெடுப்பு




கிளிநொச்சி,ஓக.09

கிளிநொச்சியில் குறைந்த வரு மானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையிலான பல்வேறு சமூக நலத் திட்டங்கள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப் பட்டு வருகின் றன.

இதற்கமை வாக அண்மை யில் குறைந்தவரு மானம் பெறும் குடும்பங்களுக்கு ஒரு தொகை தென்னங்கன்று களும் அவற்றிற் கான உரப்பொதிகளும் வழங்கப்பட் டன.

இதன்போது, தென்னங்கன்று களை வளர்க்கும் முறையான பொறி முறை, உரமிடல் மற்றும் அவற்றை வினைத்திறனாக கையாளுதல் உள் ளிட்ட சிறந்த நடைமுறைகள் தொடர் பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்வும் தெங்கு அபிவிருத்தி சபையின் அதி காரிகளினால் முன்னெடுக்கப்பட் டது. இந்த விவசாய ஊக்குவிப்பு முன் னெடுப்பானது மீரகம சில்வர் மில் கம் பெனியின் நன்கொடை மூலம் மேற் கொள்ளப்பட்டது.

மேலும், கிளிநொச்சி, பிரதேசத் தைச் சேர்ந்த 13 வயது சிறு வனின் இறுதிச் சடங்குக்கான பணிகள் படைவீரர்களின் உதவியுடன் முன் னெடுக்கப்பட்டன. வறுமைக்கோட் டின் கீழ் வசிக்கும் குடும்பத்தைச் சேர்ந்த இச்சிறுவன் ஊஞ்சல் ஆடிக் கொண்டிருந்த சமயம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெல்லம்பிட்டியவில் மூவர் கைது!

வெல்லம்பிட்டிய – சேதவத்தை கறுப்பு பாலம் எனப்படும் பாலத்தின் அடியில் சந் தேகத்தின் பேரில் நடமாடிய மூவரை இராஜ கிரிய புலனாய்வுத் துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது வாதுவ, மரு தானை மற்றும் ரிதிகம பிரதேசங்களைச் சேர்ந்த 30, 36 மற்றும் 29 வயதுக ளையுடைய மூன்று நபர்களே கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கறுப்பு பாலத்தின் அடியில் போதைப் பொருள்கள் கைமாற்றப்படுகின்றன என இராஜகிரிய புலனாய்வுத் துறை பொலி ஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இந்தத் தகவலுக்கமைய மேற் கொள்ளப்பட்டு வந்த தேடுதலின் போது பாலத்தின் அடியில் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய மூவர் சுற்றிவளைக்கப்பட்டனர்.

இவ்வாறு இவர்களை சுற்றிவளைத்த வேளையில் அவர்களிடம் காணப்பட்ட பய ணப்பையிலிருந்து 10கிலோ 200 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா பொதிகள் மீட் கப்பட்டன. இதனையடுத்து அந்த மூவரை யும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த இருந்தனர்.

மேலும் இச்சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை இராஜகிரிய புல னாய்வுத் துறை அதிகாரிகள் மேற்கொண் டுள்ளனர்.

## பண்டாரவன்னியன் நிகழ்வில் கலைஞர்களுக்கு கட்டுப்பாடு!

வவுனியாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள பண்டாரவன்னியனின் 215 ஆவது வெற்றி விழா நிகழ்வில் கலைஞர்க ளின் கருத்து சுதந்திரத்திற்கு நகரசபை உறுப் பினர்கள் தடை போட முயல்வது கண் டிக்கத்தக்கது என கலைஞர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

பண்டாரவன்னியனின் வெற்றி நாள் ஏற்பாடுகள் தொடர்பில் பொது அமைப் புக்களுடனான சந்திப்பு ஒன்று நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது.

இதன்போது கலைஞர்கள் கவியரங்கம் செய்யும் போது அரசியல் கட்சிகளை விமர் சனம் செய்யக்கூடாது எனவும், கவியரங்கில் பயன்படுத்தும் கவிதையை முற்கூட்டியே நகரசபை தலைவரிடம் காட்டி அனுமதி பெற வேண்டும் எனவும் கூட்டமைப்பின் நகரசபை உறுப்பினர்களான ந. சேனாதிராஜா மற்றும் சு.காண்டீபன் ஆகியோர் தெரிவித்திருந்த னர்.

இந்தக் கருத்தானது எமது கருத்து சுதந்திரத்திற்கு தடை போடும் செயற்பாடு என் பதுடன் கலைஞர்களை அவமதிக்கும் செயற் பாடு ஆகும். கலைஞர்கள் சுதந்திரமாக செயற் பட வேண்டும். எமது மக்களால் தெரிவு செய் யப்பட்டவர்களே கருத்து சுதந்திரத்திற்கு தடை போட்டு குரல்வளையை நசுக்க முயல்கின்ற மையை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த இரு நகரசபை உறுப்பினர்களும் தமது கருத் துக்களை மீளப்பெற வேண்டும் எனவும் கலைஞர்கள் கடும் விசனம் தெரிவித்துள் ளனர்.

## மீண்டும் ஒரே கடவையில் இரண்டு ரயில்கள் சந்திப்பு

### அதிர்ஷ்டவசமாக அனர்த்தம் தவிர்ப்பு



கொழும்பு, ஓக.09

ஒரேரயில்கடவையில் இரண்டு ரயில்கள் பயணித்தமையின் கார ணமாக அங்குலான பகுதியில் நேற்றுக் காலை ரயில் போக்கு வரத்து ஸ்தம்பிதமடைந்தது என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

அளுத்கமையிலிருந்து கொழும்பு, கோட்டை நோக்கி பய ணித்த ரயில் நேற்றுக் காலை 8.00 மணியளவில் அங்குலான பகுதியில் இயந் திர கோளாறு கார ணமாக நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

ரயில் நிறுத்தி வைக்கப்பட்டி ருந்த அதே கட வையில் களுத்து றையில் இருந்து காலை 7.00 மணிக்கு நீர்கொழும்பு நோக்கி பயணித்த ரயில் பயணித்து இரண்டு ரயில்களும் ஒரே கட வையில் சந்தித்துள்ளன.

அதிர்ஷ்டவசமாக நீர்கொழும்பு நோக்கி பயணித்த ரயில் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட் டமையால் நிகழவிருந்த மற்று மோர் பெரிய விபத்தொன்று மயி ரிழையில் தவிர்க்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 'செங் கடகல மெனிக்கே' ரயில் பணலிய பகுதியில் சமிக்ஞை இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளை, பின்னால் சென்ற ரம் புக்கனை ரயில் மோதி விபத் துக்குள்ளாகியதும் இதில் 35 பேர் காயமடைந்தனர் என்பதும் தெரிந் ததே.

## எட்டாவது கொழும்பு பாதுகாப்பு மாநாடு!

எட்டாவது கொழும்பு பாதுகாப்பு மாநாடு இம்மாதம் 30ஆம், 31ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மாநாட்டிற்கான அனைத்து நடவடிக் கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க நேற்று மன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தி யாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

உலக சவால்களுக்கு மத்தியில் நாட்டின் பாதுகாப்பு என்ற தொனிப்பொருளில் ஏற் பாட்டு செய்யப்பட்டுள்ள இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். ஆரம்ப வைபவத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரைநிகழ்த்துவார் என்றும் அவர் கூறி னார்.

உலகம் முழுவதும் உள்ள பாதுகாப் புடன் சம்பந்தப்பட்ட பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள், கொள்கை வகுப்பாளர்கள், பாது காப்பு நிபுணர்கள், ஆய்வாளர்கள் எனப் பலர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர் என்றும் இராணுவத் தளபதி மகேஷ் சேனா நாயக்க மேலும் கூறினார்.

யாழ். ஆறுகால்மடத்தில்

## சுயதொழில் முயற்சி கடன் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஓக.09

யாழ்ப்பாணம், புதிய சோனக தெரு ஜே/88 கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு சங்க நிதியிலிருந்து சுயதொழில் முயற்சி கடன் வழங்கும் நிகழ்வு சங்கத் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை 4 மாலை 4மணிக்கு ஆறுகால் மடம் அறிவொளி கலையரங்க முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஜே/88 கிராம அலுவலர் ஆர்.சல்பீர் கலந்து கொண்டு கடன் திட்ட பயனாளிகளுக்கான கொடுப்பளவை வழங்கவுள்ளார்.

## தினசரி ராசி பலன் (09.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 24 ஆம் நாள் வியாழக்கிழமை திரியோதசித்திதி இரவு 10.45 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: திருவாதிரை காலை 8.25 வரை பின்னர் புனர்பூசம். மரணயோகம் காலை 8.25 வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 1.49 மணி முதல் 3.22 மணி வரை.

**சுபநேரம்** - காலை 7.35 மணி முதல் 9.05 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத தேய்பிறை திரியோதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- புனர்பூசம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். புது முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். புது வீட்டில் குடியேறும் யோகம் உண்டு. குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் எல்லாம் வெற்றி அடையும்.

**மிதுனம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்** யோசனையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் வெளியாள்களால் சிற்சில பிரச்சினைகள் உண்டாகும். கடுமையான பணிச் சுமையால் சோர்வு உண்டாகும். நண்பர்கள் பகைவர்களாக மாறுவார்கள்.

**சிம்மம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவார்கள். உத்தியோகத்தர்களின் உழைப்புக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வேலையைப் போராடி முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணபலம் பெருகும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். பேச்சில் நிதானம் தேவை. உறவினர்கள் நண்பர்களுடன் வீண் பகை உண்டாகும். உத்தியோகத்தில் ஓய்வெடுக்க முடியாத படி வேலைச் சுமை அதிகரிக்கும்.

**தனுசு** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடலாரோக்கியம் பாதிப்படைந்து வைத்தியச் செலவுகள் ஏற்படலாம். தொழிலில் முடக்கம் ஏற்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**மகரம்** நன்மையான நாள். பணவரவு அதிகரிக்கும். இதுவரை குடும்பத்தில் இருந்த மனக்குறைகள் நிவர்த்தியாகும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும்.

**கும்பம்** யோகமான நாள். பணபலம் பெருகும். எடுத்த காரியத்தில் வெற்றி உண்டாகும். வீடு, வாகன யோகம் கிட்டும். கஷ்டங்கள் நிவர்த்தியாகும். வழக்கு விஷயம் வெற்றி அடையும்

**மீனம்** குழப்பமான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு மனச் சஞ்சலம் உண்டாகும். உடல் நலம் பாதிப்படையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் மனச் சஞ்சலம் உண்டாகும்.

சந்திராஷ்டம நாள்; **விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இலங்கை – சுவிஸ் புலம்பெயர்வு கூட்டாண்மை ஒப்பந்தம் கைச்சாத்து!

கொழும்பு, ஓக.09

சுவிஸ் கூட்டமைப்பின் நீதி மற்றும் பொலிஸ் கூட்டுத் திணைக்களத்தின் தலைவரான, பெடரல் கவுன்சிலர் சிமோனட்டா சொமருகா இலங்கைக்கான மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்தார்.

இலங்கை அரசு மற்றும் சுவிஸ் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கிடையில்புலம்பெயர்வு கூட்டாண்மை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதே இந்த விஜயத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

இலங்கை அரசு சார்பில் உள்ளக அலுவல்கள் மற்றும் வயம்ப அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மற்றும் சுவிஸ் கூட்டாட்சி மன்றம் சார்பில் பெடரல் கவுன்சிலர் சிமோனட்டா சொமருகா ஆகியோரால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும்பயன்தருகின்ற புலம்பெயர்வு தொடர்பான நிலையான மற்றும் தேர்ச்சியான உரையாடல்களை ஸ்தாபிப்பதனையும் புலம்பெயர்விடயங்கள்தொடர்பான பொது பிரதிபலிப்பு செயல்முறையினையும் சாத்தியமாக்குகின்றது.

குறிப்பாக, புலம்பெயர்வு ஓட்டத்தை முகாமை செய்தல், ஒழுங்கற்ற புலம்பெயர்வை தடுத்தல், குடிமக்கள், நாடற்ற மக்கள், மூன்றாம் நாட்டுக் குடிமக்களை மீள்அனுமதித்தல், மீள்உதவி மற்றும் மறுவாழ்வு, புலம் பெயர் ஆட்சி விவகாரங்களில் திறன் விருத்தி, குடிபெயர்பவர்களை கடத்தும் செயற்பாட்டை தடுத்தல், ஆட்கடத்தலுக்கெதிராக போராடுதல், வீசா மற்றும் கன்சியூலர் சம்பந்தப்பட்ட நிர்வாக விவகாரங்கள், தொழிற்பயிற்சி, அனைத்து மட்டங்களிலும் முழுமையான அளவில் ஈடுபடுவதனூடாக நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக பாதுகாப்பான ஒழுங்கான புலம்பெயர்வைமேம்படுத்தல், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த இலங்கையர்களின் முதலீடுகளுக்கான கட்டமைப்பை வலுப்படுத்துதல், ஒருங்கிணைப்பு, சட்ட மற்றும் நல்லிணக்கத்திற்கான விதிகளை மேம்படுத்தக்கூடிய திட்டங்கள் ஆகிய துறைகளில் சாத்தியமாக்குகின்றது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் இரு நாடுகளுக்குமிடையிலான கலந்துரையாடல்கள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

இலங்கைக் குழுவை பதில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் வசந்த சேனாநாயக்க வழிநடத்தினார். ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்துவதற்கு இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், உயர் நல்லிணக்கம், பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்ளல் மற்றும் சர்வதேச சமூகத்துடனான முன்னேற்றகரமான ஈடுபாடு ஆகிய விடயங்கள் தொடர்பில் இக்கலந்துரையாடல்கள் அமைந்தன.

இந்த நிகழ்வில் வெளியுறவுச் செயலாளர் பிரசாட் காரியவசம், மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உள்ளடங்கலாக பல்வேறு அமைச்சுகளின் உத்தியோகத் தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கை விஜயத்தின் போது கவுன்சிலர் சொமருகா கிழக்கு, மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சுவிஸ் நிகழ்ச்சித்திட்டங்களையும் இதன் போது பார்வையிட்டார்.

## தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!




இலங்கைக்கு மீண்டும் ஜீ.எஸ்.பி. பிளஸ்வரிச்சலுகை கிடைத்ததைத் தொடர்ந்துதைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் பெருமளவு அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதற்பாதியில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் 228 கோடி டொலராக இருந்தது.

இந்த ஆண்டு இது 235 கோடி டொலர் வரை உயர்ந்திருப்பதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

அமெரிக்காவுக்கே ஆகக்கூடுதலான ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் 104 கோடி டொலர் வருமானம் கிடைத்துள்ளது என்றும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு உதவும் ஜப்பான்!

ஜப்பானின் விசேட தூதுக் குழுவினர் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கள அலுவலகத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

ஒக்கயாமா, அக்யிவா நகரத்தின் நகராதிபதி தலைமையிலான பிரதிநிதிகளே குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு வழங்கப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வி பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவது அவசியம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# 48 மருந்து வகைகளின் விலை குறைப்பு: நோயாளர்களுக்கு அதிகமான பயன்கள்!

கொழும்பு, ஓக.09

48 மருந்து வகைகளின் விலை குறைப்பு காரணமாக நோயாளர்களுக்கு 400 கோடி ரூபாவுக்கும் அதிகமான பயன்கள் கிடைத்துள்ளன என கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

மேலும், உமாஓய திட்டத்தினால் ஏற்பட்ட நீர் ஒழுக்கு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த வீட்டு வாடகை நீடிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் உயர்ந்தபட்சமாக ஆறு மாதங்களுக்கு மாதாந்த வாடகை தொகையை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருந்தது.

வீட்டு உரிமையாளர்கள் வசிப்பதற்கு மாற்று காணிகளை வழங்கும் வரை உயர்ந்தபட்ச அளவில் மேலும் ஆறு மாதங்களுக்கான வாடகை தொகை வழங்கப்படும் என்றும் இணை அமைச்சரவைப் பேச்சாளர் கயந்த கருணா திலக்க தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் கருத்து வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

48 மருந்து வகைகளின் விலை குறைக்கப்பட்டுள்ளமையினால், நோயாளர்களுக்கு 400 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நிவாரணம் கிடைத்துள்ளது.

பயணிகள் போக்குவரத்திற்காக சுற்றாடலுக்கு ஏற்ப 100 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது பற்றி அரசு கவனம் செலுத்தியுள்ளது.

மின்சாரத்தின் மூலமும், கலப்பு முறையிலும் இயங்கும் ஆயிரம் பஸ்கள் இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்படவிருக்கின்றன.

ஹங்கேரி நாட்டு நிறுவனம் ஒன்று இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாக புதிய கட்டடம் மாணவர்களிடம் கையளிப்பு





திருகோணமலை, ஒக.09

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரயோக விஞ்ஞான பீட கட்டடத் தொகுதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாணவர்களிடம் கையளித்தார்.

மேலும், புதிய கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகளும் இதன்போது ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் விஜயம் செய்த ஜனாதிபதியை மாணவர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

நினைவுப் பலகையை திறந்து வைத்து புதிய பிரயோக விஞ்ஞான பீடக் கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, புதிய கேட்போர் கூடத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

சகல வசதிகளையும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பிரயோக விஞ்ஞான பீட கட்டடத்திற்கான மொத்த செலவு 41 கோடி ரூபாவாகும். அத்துடன் நேற்று முன்தினம் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள கேட்போர் கூடத்திற்கு 78 கோடியே 40 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நிலவும் விடுதிவசதிகள் உள்ளிட்ட ஏனைய கட்டடங்களின் பற்றாக்குறைக்கு தீர்வுகாணும் வகையில் சகல பல்கலைக்கழகங்களுக்கும் கட்டட வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான திட்டம் 2015ஆம் ஆண்டில் உயர் கல்வியமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது.

இச்செயற்திட்டத்தின் கீழ் சகல பல்கலைக்கழகங்களிலும் 162 கட்டடங்களை புதிதாக நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் காணப்படுகின்றன. இந்த நிர்மாணப் பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதுடன், அதில் 86 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிதி தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் இணைந்த பீடங்களுக்கு 84 விடுதிக் கட்டடங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றினூடாக 33,600 மாணவர்கள் தங்குமிட வசதிகளை பெற்றுக்கொள்ளவுள்ளனர். இவற்றுள் 78 விடுதிகளின் நிர்மாணப் பணிகள் தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்திற்கு வருகை தந்த ஜனாதிபதிக்கு வளாகப் பொறுப்பாளர் கலாநிதி வீ. கனகசிங்கம் நினைவுப்பரிசில் வழங்கினார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன், அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, தயாசிறி ஜயசேகர, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா, கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தர் மருத்துவ கலாநிதி கருணாரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (சு)

## இந்த வருடத்தில் மட்டும் பாதாளக் குழுவின் 15 பேர் பலி!

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், பாதாள உலகக் குழுவினருடனான மோதல்களில் 15 பேர் பலியாகியுள்ளனர் என பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

உயிரிழந்த அனைவரும் பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் என பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல்களின்போது மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் 52 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 11 துப்பாக்கிகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், சந்தேகநபர்களிடமிருந்து ஹெரோயின், கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் பாதாள உலகக் குழு உறுப்பினர்களைக் கைது செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

## அதிகாரத்தைக் கைப்பற்றாமல் எதிர்க்கட்சி தலைமைப் பதவி கோருவது முறையற்றது!

### அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



மஹிந்த அணியினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோருவதைவிடுத்து, ஆளும் தரப்பில் உள்ள ஐ.ம.சு.மு உறுப்பினர்களையும் உள்ளடக்கி அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் கட்சிகளுக்கு இருக்கும் அடையாளங்களை ஏற்றுக் கொள்ளாத வகையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டால் அது அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துவிடும் என்றும் அவர் கூறினார்.

எதிரணியில் 70 ஆசனங்கள் இருப்பதாயின் ஆளும் கட்சியில் உள்ள 26 பேருக்கு கீழ்பட்டு இருக்காமல் ஐ.ம.சு.முவின் நிறைவேற்றுக் குழுவில் பங்குபற்றி சகலரையும் இணைத்துக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்க வேண்டும். அதனை விடுத்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெற முயற்சிப்பது அர்த்தமற்றது என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் நாடாளுமன்றத்தில் எழுந்த வாதப் பிரதிவாதத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அநுரகுமார திசாநாயக்க இதனைக் கூறினார்.

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மீது எமக்கு தனிப்பட்ட கோபம் ஏதுமில்லை!

### சபையில் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன



எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மீது எமக்கு எந்தவொரு தனிப்பட்ட கோபமும் இல்லை. ஆசன அடிப்படையில் எதிர்க்கட்சியில் எமக்கே அதிகளவில் ஆசனங்கள் உள்ளன. ஆகவே நீதியான முறையின் பிரகாரம் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமக்கே பெற்றுத்தர வேண்டும் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான வாக்குவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்–

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் எமக்கே அதிகளவிலான ஆசனங்கள் உள்ளன. தற்போது எமது குழுவில் 70 பேர் உள்ளனர். ஆகவே எதிர்க்கட்சி தலைவர் பதவி எமக்கே பெற்று தர வேண்டும் என நாம் கோரி எழுத்து மூல கடிதமொன்றை சபாநாயகரிடம் கையளித்தோம்.

இதன்போது இன்று தீர்மானத்தை வழங்குவதாக கூறியிருந்தீர்கள். புதிய தீர்மானமொன்றை வழங்குவதாகவே கூறினீர்கள். ஆனால் எங்கே தீர்மானம். எதிர்க்கட்சி தலைவர் பதவியை எமக்கு பெற்றுத் தர வேண்டும்.

சம்பந்தனுடன் எமக்கு தனிப்பட்ட பிரச்சினை இல்லை. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோதும் அவருக்கு கீழ் நாம் செயற்பட்டுள்ளோம். ஆகவே சம்பந்தன் எமக்குப் பிரச்சினையில்லை. எனினும் நாடாளுமன்றத்தில் ஜனநாயக உரிமை பாதுகாக்க வேண்டும். சம்பிரதாயத்தை மீறி செயற்படக் கூடாது. நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் தற்போது செல்லாக் காசாக மாறிவிட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மொரகஹகந்த – களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தில் முறைகேடுகள் இருப்பின் முறைப்பாடு செய்வதற்கு விசேட பிரிவு!




மொரகஹகந்த – களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளில் ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என உறுதியான தகவல்கள் சாட்சியங்களுடன் காணப்படுமாயின் அது தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஜூலை 23 ஆம் திகதி இடம்பெற்ற களுகங்கை நீர்த்தேக்கத்தின் நீர் நிரப்பும் விழாவின்போது இந்த விசேட பிரிவை துரித மாகஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கப்பட்டதற்கமைவாகவே இந்த விசேட பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

23 ஆயிரம் கோடி ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இந்த நாட்டின் பெரிய பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டமான மொரகஹகந்த – களுகங்கை நீர்த்தேக்கத்தின் நிர்மாணப் பணிகளை எவ்வித முறைக்கேடுகளுமின்றி முறையாகவும் வினைத்திறனாகவும் நிறைவு செய்து, அதன் பயனை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும் என அரசின் அறிவிப்பு கூறுகிறது. (சு)

உடன் பிறப்பே... ஒவ்வொரு தி.மு.க தொண்டனின் நாடி நரம்புகளையும் புடைக்கச் செய்யும், புத்தெழுச்சியுடன் உந்தித் தள்ளும் இந்த ஒற்றைச்சொல்லை தன்னுடைய உடன் பிறவாச் சகோதரர் அண்ணாவிடமிருந்து வாங்கி, அதை ஒவ்வொரு தி.மு.க தொண்டனின் வாழ்க்கை மந்திரமாக மாற்றிய பெருமைக்குரியவர் – கலைஞர் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர் கருணாநிதி.

இந்தியாவின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவர் கருணாநிதி.திராவிட இயக்கத்தின் பால் ஈடுபாடு கொண்ட ஒவ்வொருவரும் கருணாநிதியை வாழ்த்தி மகிழ் கிறார்கள்.. அவர் புகழ் பாடி சந்தோஷிக்கிறார்கள். கருணா நிதியின் நீண்டு நெடி துயர்ந்த பிரமாண்டமான அரசியல், சமூக, திரையுலக வாழ்க்கையிலிருந்து சில துளிகள் உங்களுக்காக இங்கே.........



# தமிழகம் கண்ட பெரும் தலைவன் கருணாநிதி!



திருவாரூர் முத்துவேல் தட்சிணா மூர்த்தி... இந்தப் பெயர் அநேகருக்குத் தெரியாது. ஆனால் கலைஞர் என்ற ஒற்றை வார்த்தையைச் சொன்னால் ஒட்டுமொத்த தமிழ் உலகுக்கும் நன்றாகத் தெரியும். அதுதான் கருணாநிதியின் சாதனை.

பெயர் சூட்டியவர் யார்... நிறையப் பேருக்கு கலைஞர் என்ற பெயர் எப்படி கருணாநிதிக்கு வந்தது என்பது தெரியாமல் இருக்கலாம். அது ஒரு சுவாரஸ்யமான கதை. நடிகவேள் எம்.ஆர்.ராதா தான், கருணாநிதிக்கு கலைஞர் என்ற பெயரைச் சூட்டி அழகு பார்த்தவர். கருணாநிதி என்ற பெயரை விட கலைஞர் தான் இன்று அவரது நிலையான பெயராக நிலைத்து போய் நிற்பது விசித்திரம்தான்.



## 5 முறை தமிழக முதல்வராகி பொன்விழா கண்டவர் கலைஞர்

தூக்கு மேடை நாடகத்தின்போது இந்தப் பட்டத்தைச் சூட்டினார் ராதா. தமிழக அரசியல் வரலாற்றில் கருணாநிதியின் சாதனைகளுக்கும், அவரது அரசியல் பயணத்திற்கும் தனி இடம் உண்டு. 5 முறை முதல்வர் பதவியைக் கண்ட ஒரே தலைவர் இவர் மட்டுமே. 1969 முதல் 2011வரை 1969 – 71, 71 – 76, 89 – 92, 96– 2001, 2006 – 2011 என முதல்வர் பதவியை வகித்துள்ளார்.

முத்தமிழறிஞர் என்றும் கலைஞர் என்றும் அன்புடன் அழைக்கப்படும் கருணாநிதி தனது 14 வயதில் அரசியல் பிரவேசம் செய்தார். பள்ளிப் பிராயத் திலேயே திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அணியான தமிழ்நாடு மாணவர் மன்றத்தின் நிறுவுநர் கருணாநிதி. 13 வயதில் இதைத் தொடங்கினார். பேர றிஞர் அண்ணா திமுகவை நிறுவிய போது அவருடன் துணை நின்று இயக்கம் கண்டவர் கருணாநிதி.

### 69 முதல் திமுக தலைவர்

1969 முதல் தி.மு.கவின் தலைவராக இருந்து 2018இல் பொன் விழா கண்டவர். ஒரு கட்சியின் தலைவராக நீண்ட காலமாக தலைவர் பதவி வகித்த ஒரே இந்திய அரசியல் தலைவர் கருணாநிதிதான். தமிழக சட்டசபைக்கு தொடர்ந்து தோல்வியின்றி வெற்றி பெற்ற சாதனையாளரும் கருணாநிதிதான். 1957 இல் முதல் முறையாக திருச்சி மாட்டம் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் கருணாநிதி.

அதன் பின்னர் 1962 இல் தஞ்சாவூர், 67ல் சைதாப் பேட்டை, 71 இல் மீண்டும் சைதாப்பேட்டை, 77இல் சென்னை அண்ணாநகர், 80இல் மீண்டும் அண் ணாநகர் என போட்டியிட்டு வென்றார். 1989இல் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். பின்னர் மீண்டும், 91ல் துறைமுகம் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார்.

1996ஆம் ஆண்டு சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்ட கருணாநிதி, 2001, 2006இல் மீண்டும் சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டு வென்றார். 2011ஆம் ஆண்டு தனது சொந்த தொகுதியான திருவாரூர் தொகுதியில் முதல் முறையாக போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அத்தனையிலும் வென்ற ஒரே தலைவர் தமிழகம் முழுவதும் பல்வேறு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றியும் பெற்ற ஒரே அரசியல் தலைவர் கருணாநிதிதான்.

சட்டசபையில் எம்.எல்.சியாக, எம்.எல்.ஏவாக 30 வருடங்களுக்கும் மேலாக சட்டசபைக்குச் சென்று வந்த ஒரே தலைவர் கருணாநிதி மட்டுமே. 1977 முதல் 83 வரை சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார் கருணாநிதி.

போராட்டக் களம் என்பது கருணாநிதிக்குப் பொங்கல் சாப்பிடுவது போல. இந்தி எதிர்ப்புப் போராட்டம், கல்லக்குடி ரயில் மறியல் போராட்டம் ஆகியவைஅதில் முதன்மையானவை. ஈழத் தமிழர்களுக்காக டெசோ என்ற அமைப்பைக் கண்டு இந்தியாவையே தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர் கருணாநிதி. பள்ளிப் படிப்போடு நிறுத்திக் கொண்ட கருணாநிதியைத் தேடி பட்டங்கள் பல ஓடி வந்தன.

அவருக்கு முதன் முதலில் 1971இல் டாக்டர் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகம். சிறந்த எழுத்தாளரான கருணாநிதி எழுதிய நூல்கள் ஏராளம் ஏராளம்..

ரோமாபுரி பாண்டியன், தென் பாண்டி சிங்கம், இனியவை ஏற்பது, சங்கத் தமிழ், குறளோவியம், பொன்னர் சங்கர், என நூற்றுக்கணக்கான நூல்களை எழுதியுள்ளார் கருணாநிதி. திருக்குறளுக்கு புது உரை எழுதி தனது குறள்





புலமையையும் வெளிப்படுத்தியவர் கருணாநிதி. தனது சுயசரிதையை நெஞ்சுக்கு நீதி என்ற பெயரில் எழுதினார் கருணாநிதி.

அதேபோல கருணாநிதி எழுதிய நாடகங்களும் ஏராளம். சிலப்பதிகாரம், மணிமகுடம், ஒரே ரத்தம், காதிதப்பூ, தூக்கு மேடை, நான் அறிவாளி, உதயசூரியன் ஆகியவை அதில் சில. சினிமாவில்தான் ஆரம்பித்தது கருணாநிதியின் வாழ்க்கை.

எம்.ஜி.ஆருக்காக ராஜகுமாரி, மந்திரிகுமாரி, மருதநாட்டு இளவரசி, மலைக்கள்ளன், காஞ்சித் தலைவன் என திரைக் கதை எழுதினார் கருணாநிதி. அதேபோல சிவாஜி கணேசனுக்காக பராசக்தி, மனோகரா என வசனப் புரட்சி செய்தார். எஸ்.எஸ்.ஆருக்கு பெருமை தேடிக்கொடுத்த படம் பூம்புகார்.

தனது படங்களில் வசனம் மூலம் புரட்சி படைத்தவர் கருணாநிதி என்றால் மிகையில்லை. தனது பதவிக்காலத்தின்போது எத்தனையோ சமூகப் புரட்சிகளுக்கு சத்தமில்லாமல் வித்திட்டவர் கருணாநிதி.

ஏழைகளுக்காக குடிசை மாற்று வாரியம் கண்டார். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தந்து நாட்டையே வியப்பில் ஆழ்த்தியவர். அதே போல ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி கொடுத்து புதுப் புரட்சி படைத்தவர். கட்டடக் கலைக்குப் புகழ் பெற்ற தமிழகத்தில், வள்ளுவருக்காக சென்னையில் கோட்டம் கண்டு இன்றளவும் தமிழர்களால் நினைவு கூறப்படுகிறார் கருணாநிதி.

### பன்முகம் கொண்டவர்

அதேபோல பூம்புகார் கலைக்கூடம் கண்டார். கன்னியாகுமரியில் 133 அடி உயரத்திற்கு திருவள்ளுவருக்குப் பிரமாண்ட சிலை அமைத்தார். எழுத்தாளர், பேச்சாளர், நிர்வாகி, திரைக்கதாசிரியர், நடிகர், எடிட்டர், பதிப்பாளர், சட்ட மன்ற உறுப்பினர், கவிஞர், அரசியல்வாதி என பன்முகம் கொண்ட பெருமைக்குரியவர் கருணாநிதி.

கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான முதல் நூல் கிழவன் கனவு. கருணாநிதி ஆற்றிய முதல் பேச்சு–நட்பு குறித்தது. பள்ளியில் அவர் பேசியது. முதல் புனை பெயர் சேரன் கருணாநிதிக்கு எத்தனையோ புனை பெயர்கள்.




ஆனால் அவர் சூட்டிக் கொண்ட முதல் புனை பெயர் – சேரன். முரசொலி பல பத்திரிகைகளில் பொறுப்புகளில் இருந்திருந்தாலும் அவர் ஆசிரியராக இருந்த முதல் பத்திரிகை முரசொலிதான். முதல் நாடகம் சாந்தா கருணாநிதி எழுதிய முதல் நாடகம் சாந்தா அல்லது பழனியப்பன். நடித்ததில் முதல் – சாந்தி கருணாநிதி நடித்த முதல் நாடகம் சாந்தி. சிவகுரு என்றபாத்திரத்தில் நடித்திருந்தார். எழுதிய முதல் திரைக்கதை எம்.ஜி.ஆருக்காக கருணாநிதி எழுதிய முதல் திரைக்கதை – ராஜகுமாரி படத்துக்காக.

### பேரறிஞர் அண்ணாவுக்கு கலைஞரை அறிமுகப்படுத்தியவர் எம்.ஜி.ஆர்.

1957இல் கருணாநிதி, சட்டசபையில் பேசிய முதல் பேச்சு 1957, மே 4 ஆம் திகதி இடம் பெற்றது. பேரறிஞர் அண்ணாவை முதன் முதலில் கருணாநி சந்திக்க காரணம் அவர் திராவிடநாடு இதழில் எழுதிய கட்டுரையே.அதைப் படித்துப் பார்த்த அண்ணா , கருணாநிதியை நேரில் அழைத்துப் பாராட்டினார். ராஜகுமாரி படத்திற்கான திரைக்கதை எழுதியபோதுதான் முதல் முறையாக எம்.ஜி.ஆரைச் சந்தித்தார்



கருணாநிதி. கருணாநிதிக்கும், அண்ணாவுக்கும் இடையே அறிமுகம் ஏற்பட காரணம் எம்.ஜி.ஆர்.தான். அவர்தான் கரு ணாநிதி குறித்து அண்ணா விடம் சொன்னார். பாண்டிச்சேரியில் நடந்த பொதுக் கூட்டத்தின்போது பெரியாரை முதல் முறையாக சந்தித்தார் கரு ணாநிதி.

1942 ஆம் ஆண்டு முரசொலி பத்திரிகையை நிறு வினார் கருணாநிதி. கருணாநிதி முதல் முறையாக சட்டசபைக்குப் போனது 1957 ஆம் ஆண்டு. தி.மு.கவில் கருணாநிதி 1961ஆம் ஆண்டு பொருளாள ராக நியமிக்கப்பட்டார். 1962 ஆம் ஆண்டு சட்டசபை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். 1967 ஆம் ஆண்டு பொதுப்பணித்துறை அமைச்சராக, முதல் முறையாக அமைச்சர் பதவியை ஏற்றார் கருணாநிதி. 1969ஆம் ஆண்டுமுதல் முறையாக முதல்வர் பதவியில் அமர்ந்தார் கருணாநிதி. அப்போது அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து அவர் முதல்வரானார். 1971ஆம்ஆண்டு மீண்டும் முதல்வராக அமர்ந்தார் கருணாநிதி. 1989ஆம் ஆண்டு 3 ஆவது முறையாக முதல்வர் பதவியில் அமர்ந்தார் கருணாநிதி.

1996 ஆம் ஆண்டு 4 ஆவது முறையாக முதல்வரானார் கருணாநிதி. 2006ஆம் ஆண்டு 5 ஆவது முறையாக முதல்வர் பதவியில் அமர்ந்தார் கருணாநிதி. மாணவப் பருவத்தில் அவர் அறிமுகப்படுத்திய பத்திரிகையே பின்னாளில் தி.மு.கவின் குரலாக மாறியது.அதுதான் முரசொலி. அதேபோல மாலை மணி ஆசிரியராக இருந்தார்.

### சாதனைகள் ஏராளம்

குடியரசுவின் துணைஆசிரியராக இருந்தார். கருணாநிதியின் சாதனைகள் என்று நிறையவே சொல்லலாம். தமிழகத்தின் முக்கியப் பாலங்கள் கருணாநியின் பெயர் சொல்லும். உதாரணம் – சென்னையில் உள்ள ஜெமினி எனப்படும் அண்ணா மேம்பாலம். சென்னை நகரி கருணாநிதி ஆட்சிக்காலத்தில், அவரது மகன் ஸ்டாலின் மேயராக இருந்தபோது கட்டப்பட்ட பாலங்கள் இன்று வரை




## சட்ட சபைத் தேர்தலில் பதின்மூன்று முறை போட்டியிட்டு வென்ற ஒரே தலைவர்!

சென்னை மக்களின் மனதில் தனி இடம் பிடித்து கம்பீரமாக நிற்கின்றன. மினி பஸ் ..ஒரு மெகா சாதனை. இதெல்லாம் ஒரு சாதனையா என்று கேட்கலாம்.

ஆனால் சென்னையைத் தாண்டி கருணாநிதி அறிமுகப் படுத்தி வைத்த மினி பஸ்ஸுக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கு நேரில் போய்ப் பார்த்தால்தான் தெரியும். ஓட்டோக்களுக்கு கொட்டி அழுத மக்களுக்கு பெரும் நிவாரணமாக வந்ததுதான் இந்த மினி பஸ். நிச்சயம் கருணாநிதியின் சாதனை இது என் பதில் சந்தேகமில்லை. உழவர் சந்தை... ஏழைகளுக்கு மின்சாரம் இவையும் கூட கருணாநிதியின் சாதனைகள்தான். உழவர் சந்தைக்கு அப்படி ஓர் ஆதரவு மக்களிடம் கிடைத்தது.

அதேபோல ஏழைகளுக்கு இலவச மின்சாரத்தை அறிமுகப்படுத்தியவரும் இவரே. கைரிக்ஷாக்களை ஒழித்து பழைய காலத்து கருப்பு வெள்ளைப் படங்களில் கை ரிக்ஷாக்வை கஷ்டப்பட்டு இழுப்போ ரைப் பார்க்கலாம்.

## முழு இந்தியாவிலும் பெயரும் புகழும் பெற்றவர்



### தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து

இன்று அது இல்லை. அந்த மனித அவலத்தை நீக்கியவரும் கருணாநிதிதான். தமிழுக்கு செம்மொழி எத்தனையோ முயற்சி எடுத்தும் கிடைக்காத தமிழ் செம் மொழி அந்தஸ்து, கருணாநிதி காலத் தில்தான் நனவாகியது. இரு பெரும் நடிகர்களை ஒரே படத்தில் பராசக்தி படம்கருணா நிதிக்கு மட்டும் உயர்வு தரவில்லை. மாறாக, சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ஆர் ஆகிய இரு பெரும் நடிகர்களை சினிமாவுக்குக்கொடுத்தது.

வசனங்களில் புயல் பரப்பியவர் கருணாநிதி. எத்தனையோ படங்களை உதாரணமாக சொல்லலாம். மனோகரா பட வசனங்கள் இன்றைக்கும் தீயாக காதுகளுக்குள் வலம் வருபவை. அதேபோல கருணாநிதியின் வசனத்தில் இடம்பெற்ற பூம்புகார் படத்தின் வசனங்கள் மற்றும் எஸ்.எஸ்.ஆர்., விஜயக்குமாரியின் நடிப்பு இன்றளவும் பேசப்படுபவை. பூம்புகார் படத்தில் ஒரு காட்சியில் வரும் வசனத்தைப் பேச மறுத்து விட்டார் அக் காலத்துச் சூப்பர் ஸ்டார் கே.பி.சுந்தராம்பாள். காரணம் இறைவனை நிந்திப்பது போல அது இருந்ததால்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகம் கண்ட பெரும் தலைவன்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

> திருவாரூரில் இருந்து 15 மைல் தூரத்தில் உள்ள திருக்குவளை என்ற கிராமத்தில் 1924 ஜூன் 3 ஆம் திகதி கருணாநிதி பிறந்தார். பெற்றோர்: முத்துவேல் அஞ்சுகம் அம்மையார். கருணாநிதிக்கு சண்முகசுந்தரம், பெரியநாயகி என்று இரு சகோதரிகள். குடும்பத்துக்கு ஒரே ஆண் பிள்ளை அவர்.



## ஓய்ந்து அடங்கியது சிம்மக்குரல்....!

## "என் உயிரிலும் மேலான அன்பு உடன் பிறப்புக்களே..."

# இனியும் ஒலிக்குமா கம்பீரமான, கரகரத்த அந்த உரிமைக் குரல்...!?



### குடும்பமே அரசியலில்

பெரும் சிரமப்பட்டு முயற்சித்தும் சுந்தராம்பாள் பிடிவாதமாக இருக்கவே, வசனத்தை மாற்றி எழுத வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டார்கருணாநிதி. கருணாநிதியின் குடும்பமே அரசியல் மற்றும் சினிமாவில் ஊறிப் போயுள்ளது. அழகிரி, ஸ்டாலின், கனிமொழி, தயாநிதி மாறன், முரசொலி மாறன் மற்றும் கருணாநிதி என 6 பேர் அரசியலில் களம் இறங்கியவர்கள். அதேபோலமு.க.முத்து, உதயநிதி ஸ்டாலின், துரை தயாநிதி, அறிவுநிதி, அருள் நிதி, தமிழரசு ஆகியோர் சினிமா



வில் கால் பதித்தவர்கள்.

ஆரம்ப காலத்தில் மாமிச உணவுகளை உண்பவராக இருந்தவர் கருணாநிதி. பின்னர் அதைக் கைவிட்டு மரக்கறி உணவை உண்பவ ராக மாறிப் போனார். கருணாநிதியைப் போல உடல் நலனைப் பேணுவதில் யாரும் இருக்க முடியாது. காலையில் எழுந்ததும் யோகா, நடைப் பயிற்சியை தவறாமல் செய்தவர். அதிகாலையிலேயே எழுந்து விடும் கருணாநிதி, நேராக அறி வாலயம் வந்து விடுவார்.

அங்கு நடைப் பயிற்சியில் ஈடுபடுவார். சில ஆண்டுகளாக இது நின்று விட்டது – வயோதிகம் மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக. அதற்கு முன்பு தினசரி அதிகாலையில் கருணா நிதியை அறிவாலயத்தில் பார்க்கலாம். அதேபோல எந்தப் பொருளாக இருந்தாலும் மணிக்கணக்காக பேசும் திறமை படைத்தவர் கருணாநிதி.



எழுதிவைக்காமல் மழை பொழிவது போல பேசும் அவரது பேச்சைக் கண்டும், கேட்டும்தானே பல ஆயிரம் இளைஞர்கள் அவர் பக்கம் திரண்டு வந்தனர். கருணாநிதி ஆரம்பத்தில் எப்படி கையெழுத்துப் போடுவார் தெரியுமா.. டி.எம். கருணாநிதி என்று. அதாவது டி.எம்.கே. என்று வருவது போல அது இருக்கும். பின்னர் மு.கருணாநிதி என்று போட ஆரம்பித்து கடைசியாக மு.க. என்று சுருக்கிக் கொண்டார்.

கருணாநிதிக்கு மிகவும் நெருக்கமானவர்கள் அவரை விதம் விதமாக கூப்பிட்டு ஆனந்தித்துள்ளனர். கருணாநிதியை விட மூத்தவரான எம்.ஜி.ஆர். கருணாநிதியை ஆண்டவரே என்று அழைப்பார். மூக்கா என்றும் அழைப்பார். சிவாஜியோ, மூனா கானா என்பார். ஆனால் குடும்பத்தினரோ தலைவர் என்று கூறுவார்கள். தொண்டர்களுக்கு எப்போதும் இவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொண்டர்களை கருணாநிதி கூப்பிடுவது அன்புடன் உடன் பிறப்பே. கருணாநிதியின் நிழலில் இருந்து தலைவர்களானவர்கள் எத்தனையோ பேர்.

எம்.ஜி.ஆர்.அதில் முக்கியமானவர். இன்னொருவர் வைகோ. பேச்சும், எழுத்தும், படிப்பும்.. கருணாநிதியின் மூச்சாகும். காலையிலேயே அத்தனை நாளிதழ்களையும் படித்து முடித்து விடுவார்.



அதேபோல முரசொலிக்கு வேண்டியகட்டுரைகள், கேள்வி பதில்களை எழுதி முடித்து விடுவார். இந்தியாவிலேயே எந்த அரசியல் தலைவரிடமும் இல்லாத ஒரு புதுமையாக புகுத்தியவர் கருணாநிதி. அதாவதுதானேகேள்விகேட்டு தானே பதிலளிக்கும் புதிய பாணி அறிக்கையை வெளியிட்டவர் கருணாநிதிதான்.

### 3 திருமணங்கள்

ஆரம்பத்தில் இது கேலி செய்யப்பட்டாலும் பின்னர் அது பிரபலமாகி விட்டது. 3 திருமணம் செய்தவர் கருணாநிதி. முதல்வர் பத்மாவதி. இவரது பிள்ளை



தான் நடிகராக இருந்த மு.க.முத்து. இரண்டாவது மனைவி தயாளு அம்மாள்.

இவரது பிள்ளைகள்தான் அழகிரி, ஸ்டாலின், தமிழரசு, செல்வி ஆகியோர். அடுத்தவர் துணைவியார் ராஜாத்தி அம்மாள். இவரது மகள் கனிமொழி. கருணாநிதியின் ஆட்சிக்காலத்தில்தான் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை புது உருவம் பெற்றது, மறுமலர்ச்சி அடைந்தது என்றால் மிகையில்லை.

சென்னையில் அவரது ஆட்சியில் கட்டப்பட்ட டைடல் பார்க் இன்று இந்தியாவின் முக்கியமான ஐடி அடையாளங்களில் ஒன்றாக திகழ்கிறது. சென்னைக்கு பல முக்கிய ஐடி நிறுவனங்களை கூட்டி வந்தவர் கருணாநிதிதான். கருணா நிதியின் நீண்ட நெடிய 60 ஆண்டுகளுக்கும் மேலான அரசியல் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் அவரை நள்ளிரவில் கைது செய்த விவகாரம்தான். இந்தியாவே அந்தக் காட்சியைப் பார்த்துப் பதறிப்போனது. தமிழக அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத வரலாற்று நிகழ்வாக அது பதிவாகி விட்டது.



### இலவச கலர் ரிவி

கருணாநிதிஎன்றவுடன்எத்தனையோ விஷயங்கள் நினைவுக்கு வரும். அதே போல இன்னொரு முக்கியமான விஷயமும் நினைவுக்கு வரும். அது தான் இலவச கலர் ரி.வி. கருணாநிதி ஆட்சியில் வழங்கப்பட்ட இந்த இலவச கலர் ரீ.வி. தமிழகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இலவச கலர் ரி.வி. இல்லாத, வாங்காத வீடே இல்லை என்ற நிலையை கருணாநிதியின் கடந்த ஆட்சி ஏற்படுத்தியது.

கிட்டத்தட்ட ஒரு 'கிங் மேக்கர்' போல 10 ஆண்டுகளுக்கும் மேலாக திகழ்ந்து வந்தார் கருணாநிதி. தி.மு.கவின் தயவு மத்தியில் ஆட்சிக்கு வருவோருக்குத் தேவை என்ற நிலையை உருவாக்கியவர் கருணாநிதி. அரசியல் காய் நகர்த்தலில் கரு ணாநிதியைப் போல சாமர்த்தியசாலி யாருமில்லை. காங்கிரஸை கடுமையாக எதிர்த்தவர். பின்னாளில் அத்தோடு நெருங்கி உறவாடினார்.

பாட்டாளி மக்கள் கட்சியுடனும் பண்போடுநட்பு பாராட்டியவர். இவரது அரசியல் காய் நகர்த்தல்கள் பெரும்பாலும் பராசக்தி வசனம் போல எப்போதும் 'சக்சஸ்'தான். அதேபோல தி.மு.கவில் அடுத்த தலைமைப் பொறுப்புக்கு யார் வருவது என்ற வாரிசுச் சண்டையையும் மிகத் திறமையாக சமாளித்து வந்தவர் கருணாநிதி.

அவரது இடத்தில் யார் இருந்திருந்தாலும், இன்னேரம் அந்தக் கட்சி உடைந்து சிதறிப் போயிருக்கும். ஆனால் கருணாநிதி என்ற மந்திரச் சொல் கட்டுக் கோப்புடன் அத்தனை பேரையும் கட்டிப் போட்டு வைத்திருந்தது.

கருணாநிதி குறித்துப் பேசினால் அவரது அரசியல் சாணக்கியத்தனம், நிர்வாக திறமை, இலக்கியப் புலமை, தமிழாற்றல், சொல்வண்ணம், எழுத்து வண்ணம் என நிறைய மனதில் தோன்றினாலும் அவரை வைத்து எத்தனையோ சர்ச்சைகளும் நமக்கு தோன்றாமல் போவதில்லை.

ஆனால் அதையும் தாண்டி கருணாநிதி இன்றும் இந்திய வரலாற்றின் பிரிக்க முடியாத ஒரு பொக்கிஷமாக திகழ்வதற்குக் காரணம், அவரது பன்முகத் திறமையும், பழுத்த அனுபவமுமே..

அவரது கடைசிக்காலத்தின் கடைசி 2 வருடங்கள் மட்டுமே அந்த கரகரத்த உயிரினும் மேலான குரலைக் கேட்க முடியாமல் போய் விட்டது.. ஆனால் மனதிலிருந்து பிரிக்க முடியாத மந்திரக் குரலாக என்றென்றும் அது நமக்குள் வலம் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. *

காலைக்கதிர்
Kalaikkathir



# கலைஞருக்கு அஞ்சலி செலுத்த திரண்ட சன சமுத்திரம்

## கண்ணீரால் நனைந்தது ராஜாஜி அரங்கம்





கருணாநிதி உடலுக்கு அஞ்சலி செலுத்த நேற்றுப் பொதுமக்கள் பல்லாயிரம் பேர் திரண்டு வந்தமையால் ராஜாஜி அரங்கில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக ராஜாஜி அரங்கில் வைக்கப்பட்டது. பிரதமர் மோடி, ஆளுநர், முதல்வர் மற்றும் துணை முதல்வர், கர்நாடகா முதல்வர் உள்ளிட்ட பிரபலங்கள் அஞ்சலி செலுத்தனர்.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்த குவிந்த வண்ணம் இருந்தனர். கருணாநிதி உடலை மெரினாவில் அடக்கம் செய்யலாம் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்பிறகு மக்கள் அதிக அளவில் குவியத் தொடங்கினார். பொலிஸார் பாதுகாப்பு கொடுக்க முடியாமல் திணறினர்.

கருணாநிதிக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தி.மு.க. தலைவர்களும், தொண்டர்களும் அலை அலையாக வந்த வண்ணம் இருந்தனர். அவர்கள் அண்ணாசாலை வழியாக ராஜாஜி அரங்கிற்கு சென்று அஞ்சலி செலுத்திவிட்டு சிவானந்தசாலை வழியாக வெளியேற ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

4 பாதைகளில் மக்கள் உள்ளே வரவும், வெளியே செல்லவும் வழிகள் உருவாக்கப்பட்டிருந்தன. அந்த 4 பாதைகளிலும் மக்கள் வெள்ளம் போல் காட்சி அளித்தனர். வாலாஜா சாலை, சிவானந்தசாலை, அண்ணாசாலை ஆகிய 3 சாலைகளிலும் எங்கு திரும்பினா லும் மக்கள் தலைகளாக காட்சி அளித்தது. லட்சக்கணக்கான மக்கள் திரண்டு வந்து தங்கள் தலைவனுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

மக்கள் வருகை அதிகரித்ததால் இந்த 3 சாலைகளிலும் ஏராளமான தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டு இருந்தன. அந்த கடைகளில் புளிசா தம், இட்லி, தயிர் சாதம் போன்றவை விற்பனை செய்யப்பட்டன. பொது மக்கள் அவற்றை வாங்கி சாப்பிட்டு விட்டு அங்கேயே சுற்றியப்படி காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே பொதுமக்கள் கருணாநிதி உடல் அருகே சென்று அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட் டனர். இதனால் ராஜாஜி அரங்கில் மக்கள் அதிக அளவில் திரண்டனர். இதனால் நெரிசல் ஏற்பட்டு தள்ளு முள்ளு ஏற்பட்டது. அப்போது பொலிஸார் லேசான தடியடி மேற்கொண்டு கூட்டத்தை ஒழுங்குபடுத்தினார்.

(கு)

## தேசிய கொடி போர்த்தி அரசு மரியாதை!




ராஜாஜி அரங்கத்தில் வைக்கப்பட்ட தி.மு.க. தலைவர் கருணாநிதி உடலுக்கு தேசிய கொடி போர்த்தி அரசு மரியாதை செலுத்தப்பட்டது.

காவேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் மாலை 6.10 மணிக்கு காலமானார். இதனை அடுத்து, ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல தலைவர்கள் அவரது மரணத்திற்கு இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

கருணாநிதியின் உடல் காவேரி மருத்துவமனையில் இருந்து முதலில் கோபாலபுரம் இல்லத்தில் உறவினர்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இதையடுத்து, அங்கிருந்து சி.ஐ.டி. காலனிக்கு அவரது உடல் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கும் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

அதன்பின்னர், சி.ஐ.டி. காலனியில் இருந்து பொது மக்கள் அஞ்சலி செலுத்தவும், பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தவும் ராஜாஜி அரங்கத்துக்கு கொண்டு சென்று வைக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து, தி.மு.க. தலைவர் கருணாநிதி உடலுக்கு முப்படை வீரர்கள் தேசிய கொடி போர்த்தி அரசு மரியாதை செலுத்தினர்.

## பிரதமர் மோடி அஞ்சலி!



பிரதமர் நரேந்திர மோடி தனி விமானம் மூலம் சென்னைக்குச் சென்று தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் மோடி நேற்று முற்பகல் 10.20 மணிக்கு விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார். அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் சென்னை மெரினா கடற்கரையை ஒட்டியுள்ள ஐ.என்.எஸ். அடையாளர் கடற்படை தளத்திற்குச் சென்றார்.

அங்கிருந்து கார் மூலம் ராஜாஜி அரங்கம் வந்தடைந்த அவர், கருணாநிதி உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மோடியுடன் ஆளுநர் பன்வாரிலால் புரோகித், நிர்மலா சீதாராமன், பொன் ராதாகிருஷ்ணன், இல கணேசன் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.

**மோடி தமிழில் இரங்கல் செய்தி**

பிரதமர் நரேந்திரமோடி தனது டுவிட்டரில் தமிழில் இரங்கல் தெரிவித்துள்ளார். அந்த இரங்கல் செய்தியில் –

“தன்னிகரற்ற தலைவரும், பழுத்த நிர்வாகியும், மக்கள் நலனுக்காகவும் சமூக நீதிக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்த தலைவருக்கு சென்னையில் அஞ்சலி செலுத்தினேன். கலைஞர் கருணாநிதியால் தங்கள் வாழ்க்கையில் மாற்றம் கண்ட கோடானு கோடி மக்களின் எண்ணங்களிலும் இதயத்திலும் அவர் வாழ்வார்” – என மோடி பதிவிட்டுள்ளார்.

## மெரினாவில் அடக்கம் செய்ய உத்தரவு



சென்னை மெரினா கடற்கரையில் கருணாநிதி உடலை அடக்கம் செய்ய இடம் ஒதுக்கும்படி தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

தி.மு.க. தலைவர் கருணாநிதியை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதி அருகே அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என தி.மு.க. தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

ஆனால், மெரினாவில் நினைவிடம் ஒதுக்குவதில் பல சட்ட சிக்கல்கள் உள்ளமையால், சென்னை காந்தி மண்டபம் அருகே 2 ஏக்கர் நிலம் ஒதுக்க அரசு தயாராக இருக்கிறது என தலைமை செயலாளர் அறிவித்தார்.

தமிழக அரசின் அறிவிப்புக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் பொறுப்பு தலைமை நீதிபதி ஹூலுவாடி ரமேஷிடம் தி.மு.க. சார்பில் முறையிடப்பட்டது. இந்த மனு மீது நேற்று விசாரணை நடைபெற்றது. அப்போது அரசுத் தரப்பு மற்றும் தி.மு.க. தரப்பு வழக்கறிஞர்கள் காரசாரமாக வாதிட்டனர்.

அப்போது சட்ட சிக்கல்கள், வலுக்கு நிலுவைஎன்றீர்கள்? இப்போது வழக்குகள் இல்லாததால்எதிர்ப்பது ஏன்? என அரச தரப்பிடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். காமராஜருக்கு நினைவிடம் அமைக்க மெரினாவில் இடம் கோரவில்லை என்றும், ஜானகி யம்மாள் இறந்தபோதும் முறையான அனுமதி கோரப்படவில்லை என்றும் நீதிபதிகள் கூறினர்.

எனினும் பல்வேறு காரணங்களைக் கூறிய அரசுத் தரப்பு வழக்கறி ஞர், கருணாநிதிக்கு மெரினாவில் இடம் ஒதுக்க முடியாது என தொடர்ந்து பிடிவாதம் செய்தார். தி.மு.க. தரப்பும் எதிர்வாதம் செய்தது.

இருதரப்புவாதங்களையும்கேட்டறிந்த நீதிபதிகள் தீர்ப்பை வாசித்தனர். அப்போது, தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடலை அடக்கம் செய்ய மெரினாவில் இடம் ஒதுக்கும்படி தமி ழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

## தீர்ப்பைக் கேட்டதும் கண்ணீர் விட்ட ஸ்டாலின்

மெரினாவில் கருணா நிதிக்கு இடம் வழங்க உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பைக் கேட்டதும் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது குடும்பத்தினர், உடனிருந்த நிர்வாகிகள் கண்ணீர் விட்டு அழுதனர்.

தி.மு.க. தலைவர் கருணா நிதியை சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அண்ணா சமாதி அருகே அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என தி.மு.க. தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், தமிழக அரசு அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

தமிழக அரசின் அறி விப்புக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் பொறுப்பு தலைமை நீதிபதி ஹூலுவாடி ரமேஷிடம் தி.மு.க. சார்பில் முறையிடப்பட்டது. இந்த மனு மீது நேற்று விசா ரணை நடைபெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடலை அடக்கம் செய்ய மெரினாவில் இடம் ஒதுக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

இந்த தீர்ப்பு குறித்த தகவல் மு.க.ஸ்டாலின் மற் றும் அவரது குடும்பத்தினருக்கு தெரிவிக்கப்பட்டது. அப்போது ஸ்டாலின் கண்ணீர் விட்டு அழுதார். அவரைப் பார்த்த மற்றவர்களும் அழுது, ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொண்டனர். பின்னர் அனைவரும் கண்ணீர் மல்க, தொண்டர்களைப் பார்த்து கைகூப்பி வணங்கினர்.

உயர்நீதிமன்ற தீர்ப்பு விவரத்தை துரைமுருகன் மைக் மூலம் தொண்டர்களுக்கு அறிவித்தார். அதன் பிறகே தொண்டர்கள் அமைதியடைந்தனர்.

(கு)

## ஒரே ஒருமுறை ‘அப்பா’ என அழைக்கட்டுமா தலைவரே..!

### கலைஞரின் மறைவுக்குப் பின் ஸ்டாலினின் கண்ணீர் மடல்



ஒரே ஒருமுறை ‘அப்பா’ என அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே... என உருக்கமான கடிதம் ஒன்றை எழுதி, ட்விட்டர் மற்றும் பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார் மு.க.ஸ்டாலின்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

# இத்தாலியில் விமான நிலையம் அருகே லொறிகள் மோதி தீப்பிடிப்பு; 2 பேர் பலி!





சம்பவத்தில் பாலமும் இடிந்தது; 60 பேர் காயம்

இத்தாலியின் பொலாக்னா விமான நிலையம் அருகே டாங்கர் லொறிகள் மோதி தீப்பற்றிய தில் 2 பேர் பலியாகினர். 60 பேர் காயமடைந்தனர்.

இத்தாலி நாட்டின் போலோக்னா விமான நிலையம் அருகே பாலம் ஒன்றின் மீது கார்களை ஏற்றிக் கொண்டு லொறி ஒன்று சென்றது. அதேபாதையில் தீப்பற்றக்கூடிய பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்ற டேங்கர் லொறியும் சென்றது. இரண்டு லொறிகளும் ஒன்றுடன் ஒன்று மோதியுள்ளன. இந்தசம்பவத்தில் லொறிகள் வெடித்ச் சிதறின. இதனால் ஏற்பட்ட தீ வான்வரை பரவியது.

இந்த விபத்தில் 2 பேர் பலியாகினர். 60 பேர் காயமடைந்தனர். இந்த விபத்தால் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது. லொறிகள் வெடித்து சிதறியதில் ஏற்பட்ட தீ பாலத்தின் கீழ் இருந்த கார் நிறுத்தும் இடத்திற்கும் பரவியது. இதில் அங்கிருந்த பல்வேறு வாகனங்களும் தீப் பிடித்து வெடித்துச் சிதறியுள்ளன.

தகவல் அறிந்து தீயணைப்பு வாகனங்களும் மற்றும் அம்புலன்ஸ்களும் சம்பவ இடத்திற்கு உடனடியாக விரைந்தன. காயமடைந்தவர்கள்மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

லொறிகள் மோதி வெடித்துச் சிதறியபின் கார் நிறுத்தும் இடத்தில் பரவிய தீயில் ஒருவர் சிக்கிக் கொண்டது பற்றிய காட்சியும் வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(கு)

# இம்ரான்கான் கட்சியில் 3 ஆவது மனைவியின் மகள்



இஸ்லாமாபாத், ஒக.09

இம்ரான்கானின் 3 ஆவது மனைவியான புஷ்ரா மனேகாவின் மகள் மெஹ்ரு ஹயாத் பாகிஸ்தான் தெக்ரிக்-இ- இன்சாப்கட்சியில் உறுப்பினராகச்சேர்ந்துள்ளார்.

பாகிஸ்தானில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தெக்ரிக் – இ – இன்சாப் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்து அக்கட்சி தலைவர் இம்ரான் கான் பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.

சமீபத்தில் அவர் தனது மத ஆலோசகர் புஷ்ரா மனேகாவை 3 ஆவது திரு மணம் செய்து கொண்டார். அவர் ஏற்கனவே திருமணமானவர். 5 குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில் புஷ்ரா மனேகாவின் மகள் மெஹ்ரு ஹயாத் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெக்ரிக் – இ – இன்சாப் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தார். அவருடன் மேலும் 2 பேர் இணைந்தனர்.

கட்சியில் இணைந்த மெஹ்ரு கூறும்போது, நாட்டில் நடைபெறும் குற்றங்களை களைய பாடுபடப் போகிறேன் என்று தெரிவித்தார்.

இவருக்கு கட்சியில் முக்கிய பதவி வழங்கப்படலாம் என்று தெரிகிறது. அதற்கு கட்சியில் எதிர்ப்பு கிளம்பும் நிலை உள்ளது. ஏனெனில் இம்ரான்கான் தனது கட்சியில் தகுதி அடிப்படையில்தான் பதவி வழங்கி வருகிறார். தேவையின்றி உறவினர்களுக்கு பதவி வழங்குவதையும், வாரிசு முறை தலைமையையும் அவர் எதிர்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் சீக்கியர் சுட்டுக்கொலை!

டொராண்டோ, ஒக.09

கனடாவில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சீக்கியர் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

கனடாவில் வசித்து வந்தவர் ககன்தீப் சிங் தாலி வால் (வயது 19). சீக்கியரான இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று குடும்பத்துடன் ஒரு திருமண விழாவுக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பினார். அதைத் தொடர்ந்து தனது வயதையொத்த நெருங்கிய உற வினர் ஒருவருடன் வெளியே புறப்பட்டுச் சென்றார்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் அவர்களைத் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டு வீழ்த்தி விட்டு தப்பிச் சென்றனர்.

அவர்கள் உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு ககன்தீப் சிங் தாலிவாலை பரிசோதித்த டாக்டர்கள் அவர் இறந்து விட்டார் என அறிவித்தனர். படுகாயம் அடைந்த அவரது உறவினருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

அப்போட்ஸ்போர்ட் பொலிஸ் துறையினர் இதுபற்றி குறிப்பிடுகையில்,

சம்பவத்தன்று இரவு 11.30 மணிக்கு துப்பாக்கிச் சூடு நடந்ததாக தகவல் வந்தது. அங்கு நாங்கள் விரைந்த போது 2 பேர் சுடப்பட்டு கிடந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இந்த துப்பாக்கிச்சூடு எதற்காக நடந்தது என தெரியவில்லை. ஆனால் திட்டமிட்டுத் தான் நடந்து உள்ளது. தாலிவாலைத்தான் குறி வைத்து உள்ளனர்என்றுதெரிகிறதுஎன்றனர்.

ககன்தீப்சிங் தாலிவால் குடும்ப நண்பர் ஜாஸ்கரன் சிங் தாலிவால், எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்து விட்டது. யாரோ வந்தார்கள். துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டு விட்டு சென்று விட்டனர் எனக் கூறினார்.

(கு)

# காஸா முனையில் இஸ்ரேல் குண்டுவீச்சு; ஹமாஸ் இயக்கத்தினர் இருவர் சாவு!

காஸாமுனையில் ஹமாஸ் இயக் கத்தினரைகுறிவைத்துநேற்றுமுன்தினம் இஸ்ரேல் குண்டு வீச்சு நடத்தியது. இதில் ஹமாஸ் இயக்கத் தினர் 2 பேர் பலியாகினர்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது.

பாலஸ்தீனைப் பொறுத்த வரையில், அங்கு ஹமாஸ் இயக் கம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இஸ்ரேல் ராணுவத்தினர் மீது தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிற ஹமாஸ் இயக்கம், பாலஸ்தீன மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளது.

பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரேலை மீட்டுக் கொடுத்து, மேற்குக் கரை, காஸா ஆகிய பகுதிகளைக் கொண்ட இஸ்லாமிய குடியரசாக மாற்றுவதே ஹமாஸ் இயக்கத்திநர் நோக்கம் ஆகும். ஹமாஸ் இயக்கத்தினரை இஸ்ரேல் பயங்கரவாதிகள் என கூறுகிறது.

இந்த நிலையில், காஸாமுனை யில் ஹமாஸ் இயக்கத்தினரை குறி வைத்து நேற்று முன்தினம் இஸ்ரேல் குண்டு வீச்சு நடத்தியது. இதில் ஹமாஸ் இயக்கத்தினர் 2 பேர் பலியாகினர். இஸ்ரேல் ராணுவத்தினரை குறிவைத்து ஹமாஸ் இயக்கத்தினர் நடத்திய துப்பாக் கிச்சூட்டுக்கு பழி வாங்கும் விதமாக இந்த குண்டு வீச்சை நடத்தியதாக இஸ்ரேல் கூறு கிறது.

# சட்ட விரோதமாக எல்லை தாண்டிச்சென்ற தென்கொரியரை விடுவித்தது வடகொரியா!

சட்ட விரோதமாக எல்லை தாண்டிச் சென்ற தென்கொரியரை வடகொரியா விடுதலை செய்துள்ளது.

தென் கொரியாவை சேர்ந்தவர் சியோவ் (வயது 34). இவர் கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி சட்ட விரோதமாக எல்லை தாண்டி வட கொரியாவுக்குள் நுழைந்தார். அதைத் தொடர்ந்து அவர் கைது செய் யப்பட்டார்.

ஆனால் அவரை நேற்று முன்தினம் வடகொரியா விடுதலை செய்துவிட்டது. இது குறித்து தென் கொரியாவின் ஒருங்கிணைப்புத் துறை அமைச்சகம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில்–

வடகொரியா இன்று (நேற்று முன்தினம்) நம் நாட்டைச் சேர்ந்த சியோவ் என்பவரை பான்முன் ஜோமில் (எல்லையோர கிராமம்) வைத்து எங்களிடம் ஒப்படைத்தது. அவர் கடந்த 22 ஆம் திகதி சட்ட விரோதமாக தங்கள் நாட்டில் நுழைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டார் என வடகொரியா கடந்த திங்கட்கிழமை அறிவித்தது. இந்த நிலையில் இப்போது அவர் விடுதலை செய்யப்பட்டு இருக்கிறார் எனக் கூறப்பட்டு உள்ளது.

மேலும், வடகொரியாவில் பல்லாண்டுகாலமாகசிறையில்அடைக்கப்பட்டு உள்ள தங்கள் நாட்டைச் சேர்ந்த மேலும் 6 கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று தென் கொரியா வேண்டுகோள் விடுத்து வந்தது. இந்த நிலையில் இப்போது சியோவை வடகொரியா விடுதலை செய்து இருக்கின்றமை சாதகமான அறிகுறியாக தென்கொரியா எடுத்துக்கொண்டுள் ளது.

கொரியப்போருக்கு பின்னர் வட கொரி யாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே தீராத பகை நிலவி வந்தது. இப்போது அந்த நிலை மாறி இரு நாடுகளுக்கு இடையே இணக்கமான சூழல் உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(கு)

# பங்களாதேஷில் வீதி விபத்தை ஏற்படுத்தினால் தூக்குத் தண்டனை!

வீதி விபத்தில் உயிரிழப்பு ஏற்படுத்தும் வாகன சாரதிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டம் கொண்டு வர பங்களாதேஷ் அரசு முடிவு செய்துள்ளது.

பங்களாதேஷில் அதிக அளவில் வீதி விபத்துகளும் அதனால் ஏராளமான உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. கடந்த 29 ஆம் திகதி நடந்த விபத்தில் 2 மாணவர்கள் உயிரிழந்தனர்.

அதிவேகமாக வந்த வாகனம் மோதியதில் அவர்கள் பலியாகினர். எனவே, வீதி பாதுகாப்பு சட்டத்தை மறுசீரமைப்பு செய்ய வலியுறுத்தி மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

உயிரிழப்பு ஏற்படுத்துவோருக்கு அதிகபட்சமாக தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை முக்கியமாக வலியுறுத்தப்பட்டது.

கடந்த 10 நாள்களாக தலைநகர் டாக்காவில் நடந்த போராட்டத்தில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். 8 பஸ்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. வீதி மறியல் போராட்டமும் நடந்தது. டாக்கா உள்பட மற்ற பகுதிகளுக்கும் போராட்டம் பரவியது.

முடிவில் வீதி விபத்தில் உயிரிழப்பு ஏற்படுத்தும் வாகன சாரதிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டம் கொண்டு வரப்படும் என உறுதி அளித்தனர்.

# ஒரே ஒருமுறை 'அப்பா'...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருணாநிதியின் மறைவுக்குப் பிறகு ஸ்டாலின் தன் கைப்படக் கடிதம் ஒன்றை எழுதி ட்விட்டர் மற்றும் பேஸ் புக்கில் வெளியிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

"எங்கு சென்றாலும் சொல்லிவிட்டுச் செல்லும் எனது ஆருயிர்த்தலைவரே, இம்முறை ஏன் சொல்லாமல் சென்றீர்கள்?

என் உணர்வில், உடலில், ரத்தத்தில், சிந்தனையில், இதயத்தில் இரண்டறக் கலந்துவிட்ட தலைவா! எங்களையெல்லாம் இங்கேயே ஏங்கவிட்டு எங்கே சென்றீர்கள்?

ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண் டிருக்கிறான் என்று நினைவிடத்தில் எழுத வேண்டும் என்று 33 ஆண்டுகளுக்கு முன்பே எழுதினீர்கள். இந்த தமிழ் சமூகத்துக்காக இடையறாது உழைத்தது போதும் என்ற மனநிறைவுடன் புறப்பட்டு விட்டீர்களா?

95 வயதில், 80 ஆண்டு பொதுவாழ்வுடன் சளைக்காமல் ஓடி, 'நாம் தாண்டிய உயரத்தை யார் தாண்டுவார்கள் பார்ப்போம்' என்று போட்டி வைத்துவிட்டு மறைந்து காத்திருக்கிறீர்களா?

திருவாரூர் மண்ணில் உங்கள் 95 ஆவது பிறந்த நாளாம் ஜூன் 3 ஆம் திகதி நான் பேசும்போது, 'உங்கள் சக்தியில் பாதியைத் தாருங்கள்' என்றேன். அந்த சக்தியையும், பேறிஞர் அண்ணாவிடம் நீங்கள் இரவலாகப் பெற்ற இதயத்தையும் யாசிக்கிறேன்; தருவீர்களா தலைவரே!

அந்தக் கொடையோடு, இன்னும் நிறைவேறாத உங்கள் கனவுகளையும் லட்சியங்களையும் வென்று காட்டுவோம்!

கோடானு கோடி உடன்பிறப்புகளின் இதயத்திலிருந்து ஒரு வேண்டுகோள்... ஒரே ஒருமுறை... என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே என்று சொல்லுங்கள் தலைவரே! அது ஒரு நூறாண்டு எங்களை இனமொழி உணர்வோடு இயங்கவைத்திடுமே!

அப்பா அப்பா என்பதைவிட, தலைவரே தலைவரே என நான் உச்சரித்துதான் என் வாழ்நாளில் அதிகம். அதனால் ஒரே ஒருமுறை இப்போது 'அப்பா' என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே?

கண்ணீருடன் மு.க.ஸ்டாலின்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் மு.க.ஸ்டாலின்.

# வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அதிகாரிகள் மட்டத்தில்!

## அமைச்சரவை துணை பேச்சாளர் தெரிவிப்பு

வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெற்றுவருகின்றன என சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவைதுணைபேச்சாளருமானடொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன் போது வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு எப்போது வழங்கப்படும் என்று செய்தியாளர் ஒருவர் கேட்ட



கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் கனகஹேரத் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பட்டதாரிகள் தொடர்பாகஎழுப்பிய கேள்விக்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார பதிலளித்தார்.

வேலையில்லா பட்டதாரிகளுக்கு நான்கு கட்டங்களின் கீழ், தொழில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

கட்சிபேதங்கள் இன்றி, ஆட்சேர்ப்பு இடம்பெறும். முதல் இரண்டு கட்டங்களில் 20 ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# 95 போலி பாஸ்போர்ட்டுடன் ஒருவர் கைது!

தலங்கம பகுதியில் சட்டவிரோதமான முறையில் போலி கடவுச்சீட்டுக்களை தயாரித்த சந்தேகத்தின் பெயரில் ஒருவரை கைதுசெய்துள்ளோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திட்டமிட்ட குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக் கிணங்க சோதனையிட்ட போது சந்தேக நபரை கைதுசெய்த பொலிஸார், அவரிடமிருந்து 95 போலி கடவுச்சீட்டுக்களையும், மடிக் கணினி மற்றும் ஸ்கேன் இயந்திரம் போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 61 வயதுடைய நபர் தலங்கம பகுதியைச் சேர்ந்தவர் எனவும் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக பிரதமர் விளையாட்டு நிதியம் ஆரம்பம்!



விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு முதற்தடவையாக பிரதமர் விளையாட்டு நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான நிகழ்வு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

விளையாட்டுத்துறையின் மேம்பாட்டிற்காக அரசமட்டத்தில் விசேடவேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கப்படுகிறது என பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

நகரத்திற்கு மாத்திரம் வரையறுக்காமல் கிராமிய மட்டங்களிலும் விளையாட்டுத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டின் வீர வீராங்கனைகளை சர்வதேச தளத்திற்கு கொண்டு செல்வது இந்த விளையாட்டு நிதியத்தின் நோக்கமாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

5 கோடி ரூபாவுடன் இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றாத ஜனாதிபதி!





கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது பிரயோக விஞ்ஞான பீட கட்டடதிறப்பு, உள்ளக கேட்போர் கூட அங்குரார்ப்பணம் என்பன இடம்பெற்றன. இதனை யடுத்து நடத்தப்பட்ட கூட்டமொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

இதன்போது எதிர்க்கட்சிதலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மொஹான் விஜேவிக்ரம ஆகியோர்உரையாற்றியிருந்தனர்.

எனினும் பிரதம விருந்தினராக பங்கேற்ற ஜனாதிபதி உரையாற்ற வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சுகவீனம் காரண மாகவே ஜனாதிபதி அந்த நிகழ்வில் உரையாற்றவில்லை எனக் கூறப்பட்டது

### ஊர்காவற்றுறை கடற்கரை வீதிக்கு ஈ.பி.டி.பி முயற்சியால் சூரியக் கதிர் மின் விளக்குகள்!

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர்களின் நலன்கருதி கடற்கரையை அண்டிய வீதிகளுக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச நிர்வாக செயலாளருமான மருதயினார் ஜெயகாந்தன் வழிநடத்தலில் சூரியக் கதிர் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறையில் கடற்றொழிலாளர்கள் மற்றும் இதர மக்கள் அதிகளவில் தொழில் துறைகளை மேற்கொள்ளும் இடங்களில் இரவு நேரங்களில் வெளிச்சமின்மைகாரணமாக பல இடர்பாடுகளை எதிர் கொண்டு வருகிறோம் என்றும் இதற்கான தீர்வை பெற்றுத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கு அமைய கட்சியின் இந்தப்பிரதேசசபையின் உறுப்பினர் கிளாறன்ஸால் சபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் பிரகாரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கடற்கரை வீதிக்கு 4 சூரியக்கதிர் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுவிற்சர்லாந்து சமஷ்டி சபையின் உறுப்பினருடன் பிரதமர் சந்திப்பு!



கொழும்பு, ஒக.09

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சுவிற்சர்லாந்து நாட்டின் சமஷ்டி சபை உறுப்பினர், சட்டம் மற்றும் பொலிஸ் அலுவல்கள் தொடர்பான திணைக்களத்தின் அதிகாரி சிமோனெடா சொமாருகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்றது.

# கிராமங்களையும் நகரங்களையும் ஒரேவிதமாக அபிவிருத்தி செய்வதற்கு நல்லாட்சி நடவடிக்கை!

கிராமங்களையும் நகரங்களையும் ஒரேவிதமாக அபிவிருத்தி செய்வதற்கும் பொதுமக்களுக்கு வசதிகளை செய்து கொடுப்பதற்கும் வரலாற்றில் கூடுதலான அடிமட்ட வேலைத்திட்டங்களை சமகால நல்லாட்சி அரசு மேற்கொண்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைக்கப்பட்ட பொன்ஸ்டா சமூக நலன்புரி மத்திய நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதுதொடர்பான நிகழ்வில் பிரதமர் உரையாற்றினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போதைய அரசு தேசிய நீதியில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளது. ஆட்சிக்கு வந்து 3 வருடங்களுக்குள் கிராமிய மட்டத்தில் பெரிய அளவிலான பணிகளை மேற்கொள்ள முடிந்துள்ளது. ஆயிரக்கணக்கான செயற்திட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. நாடு தற்போது புதிய அபிவிருத்திப் பாதையில் பயணித்து வருகின்றது. எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளும் இதன்மூலம் துரிதமடையும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்தார்

# செயலாளரின் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி அஞ்சலி!



காலஞ்சென்ற ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் அசங்க தொடங்வலவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல் தனது இறுதி அஞ்சலியை செலுத்தினார்.

அன்னாரது பூதவுடல் வைக்கப்பட்டிருந்த கண்டி ரிவர்டேல் மாவத்தையில் உள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தியமையுடன், அன்னாரது குடும்ப உறுப்பினர்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

மரணிக்கும்போது அசங்க தொடங்வல ஜனாதிபதியின் கீழ் உள்ள அமைச்சுக்களின் இணைப்புச் செயலாளராக கடமையாற்றினார்.

கண்டி நகர சபையின் முன்னாள் பிரதி நகர பிதாவாக கண்டி நகரின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்புகளை செய்த இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளராகவும் செயற்பட்டார். அசங்க தொடங்வல கண்டி திரித்துவ கல்லூரியின் பழைய மாணவராவார்.

காலைக்கதிர் Kalaikkathir



## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. ரயில்களில் பயணிக்க வந்த மக்கள் அவை முடங்கியமையால் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இதனாலேயே பதற்றம் ஏற்பட்டது.

ரயில்வே தொழிற்சங்கங்கள் சில இணைந்து, நேற்றுப் பிற்பகல் முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. சம்பள பிரச்சினை உட்பட சில கோரிக்கைகளை முன்னிறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள், சாரதிகள், காவலர்கள், கட்டுப்பாட்டாளர்கள் ஆகியவற்றின் தொழிற்சங்கங்கள் இணைந்துள்ளன எனவும் ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்தார்.

இதனை அடுத்து போக்குவரத்து அமைச்சு புதிய அறிவித்தல் ஒன்றை விடுத்தது.

ரயில் சேவைப் பணிப் புறக்கணிப்பு நடைபெறுவதால் ரயில் பருவச் சீட்டு உள்ளவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் இலவசமாகப் பயணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பளப் பிரச்சினை உட்பட சில கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் பணிப் புறக்கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனாலேயே கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக பதற்றமான சூழ்நிலை உருவாகியது.

தூர பிரதேசங்களுக்குச் செல்லும் பயணிகள் ரயில் போக்குவரத்து இன்மையால் ரயில் நிலையத்தை முற்றுகையிட்டனர். (ஐ)

## சரவணபவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அராலி உள்ளிட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் மக்களைப் பீதிக்குள்ளாக்கும் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் சிவில் பாதுகாப்புக் கூட்டம் அராலி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய சூழலில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் அங்கு சென்றுள்ளார். அவரைக் கண்டவுடன் அருகில் சென்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சீறிப் பாய்ந்தார்.

'குள்ள மனிதர்களின் நடமாட்டம் அராலியில் இல்லை. கஸ்தூரியார் வீதியில்தான் உள்ளார்கள், போய்ப்பாருங்கள் என்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடந்த கூட்டத்தின் பின்னர் நீர் சொன்னீராம். நீர் அப்படி எவ்வாறு கூறுவீர்? குள்ள மனிதர்களின் அட்டகாசத்தால் மக்கள் பீதிக்குள்ளானபோது, எத்தனை நாள்கள் இரவுவேளைகளில் நான் இங்கு நேரில் வந்து மக்களுடன் ஆராய்துள்ளேன்' என நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், மாகாண சபை உறுப்பினர் சயந்தனிடம் கேட்டுள்ளார்.

'உங்கள் பத்திரிகையில்தான் அவ்வாறான செய்தி வந்தது. ஏனைய பத்திரிகைகள் அவ்வாறு செய்தி வெளியிடவில்லை. தொழில் போட்டியில் இவ்வாறான செய்தியைப் போடுகின்றீர்கள் என்று தான் நான் நினைத்தேன்' என மாகாண சபை உறுப்பினர் சயந்தன் பதிலளித்துள்ளார்.

'உமக்கும் சுமந்திரனுக்கும் எனது பத்திரிகையைத் தாக்குவது தான் வேலை. அதில் என்ன பிழை வருகிறது என்பதைப் பார்த்து விமர்சிப்பதே இருவரின் வேலையாக உள்ளது' என நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் கடிந்துகொண்டார்.

'எங்கள் இருவரையும் இலக்கு வைப்பதைத்தான் நீங்களும் செய்கிறீர்கள். தகுந்த நேரத்தில் பதில் தருவோம்' எனச் சயந்தன் கூற சரவணபவன் அந்த இடத்திலிருந்து நகர்ந்து சென்றுள்ளார்.

## பெரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியின் உடலுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், அமைச்சர் மனோ கணேசன் ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையின் முக்கிய அரசியல் தலைவர்கள் பலர் நேற்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், பிரதித் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.திலகராஜ், வடிவேல் சுரேஷ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று நேரில் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிய இரங்கல் செய்தியையும் கருணாநிதியின் மகளான கனிமொழியிடம் அவர்கள் வழங்கினர். (ஐ)

## கலைஞரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி காலமானார் என்ற செய்தியை அறிந்து பாரிய இழப்பு ஒன்று ஏற்பட்ட துயரத்தை என் மனதில் உணர்ந்தேன்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

நேற்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

முதுபெரும் தமிழறிஞர், உலகத் தமிழர்களின் உன்னத தலைவர், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி காலமானார் என்ற செய்தியை அறிந்து பாரிய இழப்பு ஒன்று ஏற்பட்ட துயரத்தை என் மனதில் உணர்ந்தேன்.

கடுஞ்சுகவீனம் காரணமாக காவேரி மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்த கடந்த சில நாள்களாக அவர் பற்றிய கரிசனையோடு நான் இருந்த அதேவேளை, அவர் சுகம் அடைந்து உலகத் தமிழர்களுக்குத் தலைவனாகத் தொடர வேண்டுமென்ற பிரார்த்தனையே என் மனதில் இருந்தது.

ஆயினும் காலம் அவர் உயிரைக் கவர்ந்து சென்று விட்டது. அவர் இயற்கையெய்தி விட்டார் – என்றுள்ளது. (ஐ)

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கேள்வி நேரத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், போரின்போது நாட்டை விட்டு வெளியேறிய அகதிகள் குறித்து பிரதமரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இலங்கை மக்கள் இலங்கையில் சுதந்தரமாக வாழவேண்டும். ஆகவே போர்க் காலத்தில் நாட்டைவிட்டு வெளியேறிய சகல இலங்கையர்களும் மீண்டும் இலங்கைக்கு வரவேண்டும். இதற்காக நாம் அனைத்து மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

நாட்டுக்குத் திரும்பி வரும் மக்களுக்கு சகல உதவிகளையும் வாழ்வாதார நடவடிக்கைகளையும் செய்துகொடுக்க நாம் தயாராக உள்ளோம். அதே போல் அகதிகளாக வெளியேறி இப்போது நாடு திரும்பியுள்ள மக்களின் நிலைமைகள் குறித்தும் நாம் ஆராய்ந்து அவர்களுக்கான அடுத்த கட்ட உதவிகளைச் செய்து கொடுப்பது குறித்தும் துரித நடவடிக்கைகளை முன்னெடுகின்றோம் – என்றார்.

2010ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்தியாவிலிருந்து 9509 இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளனர். மேலும், 3815 பேர் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என இந்திய அரசின் ஊடாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அகதிகள் தம்முடன் எடுத்து வரவேண்டிய பொருள்களைக் கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்திய அரசு தயாராகவுள்ளது.

இலங்கை அதிகளுக்கு இந்தியாவில் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ், பிரஜாவுரிமைச் சான்றிதழ், போக்குவரத்துச் சான்றிதழ் போன்ற ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்க சென்னையிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு திரும்புபவர்களுக்கு காணி, வீடு, வாழ்வாதார உதவிகள், பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வது உள்ளிட்ட தேவைகள் எந்தவித தடையும் இன்றிப் பெற்றுக் கொடுப்பதற்கு மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமயவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கைக்கு நாடு திரும்பி உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாத நபர்கள் குறித்து அறிக்கையொன்றை நான் அதிகாரிகளிடம் கோருகின்றேன். மன்னார், வவுனியா பிரதேசங்களில் வீடுகளை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

## நீதிமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேரருக்கு எதிராக்த் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவரைக் குற்றவாளியாகக் கண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அவருக்குக் கடுமையான உழைப்புடன் 06 வருடங்களில் அனுபவிக்கும்படியாக 19 வருடச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதிபதி ப்ரீதி பத்மன் சுரசேன மற்றும் சிரான் குணரத்ன ஆகியோரால் இந்த தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்போது, நீதிமன்றத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டார் என இவர் மீது இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அப்போது ஹோமாகம நீதிவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது.

அதன்படி அந்த வழக்கு விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹோமாகம நீதிமன்றத்தில் பிரகீத் எக்னலிகொடவின் மனவியை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் அதே நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த மற்றொரு வழக்கில் கடந்த மாதம் 14ஆம் திகதி அவருக்கு ஆறு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவர் அதற்கு எதிராக மேன்முறையீடு செய்துவிட்டுப் பிணையில் உள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அவருக்கு எதிராகக் குற்றத் தீர்ப்பு வழங்க முன்னர் நேற்று முன்தினமே அவர் சுகவீனம் காரணமாக தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழகமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் மிதந்தபடி கருணாநிதியின் உடல் அண்ணா சமாதிக்கு வந்தது.

அரசியல் தலைவர்களான ராகுல் காந்தி, தேவ கவுடா, பரூக் அப்துல்லா, சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் இறுதிச் சடங்கில் பங்கேற்றனர். சந்திரபாபு நாயுடு, ராகுல் காந்தி, பொன் ராதாகிருஷ்ணன், தேவ கௌடா, குலாம் நபி ஆசாத், தமிழக அரசு சார்பில் அமைச்சர் ஜெயக்குமார் உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் இறுதி அஞ்சலி செலுத்தினார். கருணாநிதி உடலுக்கு முப்படை வீரர்கள் மரியாதை அளித்தனர். முப்படை வீரர்களின் இசை வாத்தியங்கள் முழங்கின.

மு.கருணாநிதியின் மீது போர்த்தப்பட்டிருந்த தேசியக் கொடியை இராணுவ வீரர்கள் எடுத்து மடித்து மு.க. ஸ்டாலினிடம் வழங்கினார்கள். கவலை தோய்ந்த முகத்துடன் தேசியக் கொடியை பெற்றுக் கொண்டு அவர் சென்றதும், மு.க. அழகரி, ராஜாத்தி அம்மாள், மகள் செல்வி, மருமகள் துர்க்கா, தமிழரசு என அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்து தங்களது குடும்பத்தின் மூத்த தலைவருக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதியாக க. அன்பழகனும், மு.க. ஸ்டாலினும் கருணாநிதி உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர். பிறகு அவரது உடல் சந்தனப் பேழையில் கிடத்தப்பட்டது. 'ஓய்வெடுக்காமல் உழைத்தவன் இதோ ஓய்வு கொண்டிருக்கிறான்' என்ற வாசகம் பொறித்த சந்தனப் பேழையில் கருணாநிதி கிடத்தப்பட்டார்.

உணர்ச்சியைக் கட்டுப்படுத்த இயலாமலும் கருணாநிதிக்குப் பிரியா விடை கொடுக்க முடியாமலும் கலங்கி நின்றார் ஸ்டாலின். சொல்லொணாத் துயரத்தைச் சொல்லி மாள முடியாமல் தவித்தனர் குடும்பத்தினர். சந்தனப் பேழையில் வைக்கப்பட்ட உடலுக்குக் குடும்ப உறுப்பினர்கள் உப்பிட்டு இறுதி மரியாதை செய்தனர்.

அனைவரது கண்ணீர் தடுத்தும் முடியாமல் சந்தனப் பேழை மூடப்படுகிறது. வாழ்க வாழ்க என்ற வாழ்த்து முழக்கத்துடன் பிரியாவிடை பெற்றார் கருணாநிதி.

நல்லடக்கம் செய்யத் தோண்டப்பட்ட குழியில், அவரது சந்தனப் பேழை மெல்ல இறக்கப்பட்டது. கூடியிருக்கும் மக்களின் கதறல் விண்ணை முட்டியது. 21 குண்டுகள் முழங்க தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (ஐ)

## பொலிஸாருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்து மக்களைப் பீதிக்குள்ளாக்கும் இனந்தெரியாத நபர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உள்ளூர் இளைஞர்கள் பத்து பேர் வீதம் உள்ளடக்கி அவர்களோடு மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இணைத்துக் குழுக்கள் அமைக்கப்படும். அந்தக் குழுக்கள் இரவு நேர ரோந்து நடவடிக்கையை முன்னெடுக்கும். உடனடியாக அந்தக் குழுக்கள் அமைக்கப்படும் என்று யாழ். பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

அராலிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக அந்தப் பகுதி மக்களை அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக குள்ள மனிதர்கள் போன்று இருக்கின்றனர் எனவும், பாயும்சப்பாத்துக்களை அணிந்தவாறும், முகம் மற்றும் உடல் முழுவதையும் கறுப்பு உடையினால் மறைத்தவாறு வரும் சிலரே இந்த அச்சுறுத்தல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர் எனவும் அந்தப் பகுதி மக்கள் பலரும் தெரிவித்தனர்.

இவ்வாறு வருவோர் வீட்டின் கூரைகள் மீது கல்லெறிந்து தாக்குகின்றனர் எனவும் வீட்டில் இருப்ப வர்களது கண்களில் தென்படும் வகையில் பதுங்கி இருந்து விட்டுப் பின்னர் பாய்ந்து செல்கின்றனர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து இந்தச் சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் பொலிஸ் ,இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் அப் பிரதேச மக்கள் ஆகியோருக்கிடையில் ஆலோசனைக் கூட்டமொன்று அராலி அம்மன் கோவிலடியில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட மக்கள் பலரும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தனர்.

மேற்படி சம்பவத்தால் தினமும் இரவுப் பொழுதை அச்சத்துடனேயே கழிக்கின்றனர் எனவும், இளைஞர்கள் ஊர்களில் அதிகாலை மூன்று மணிவரை காவல் செய்கின்றனர் எனவும், இதனால் அவர்களால் மறு நாள் ஒழுங்காகத் தொழிலுக்கு செல்லவோ அல்லது மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்குச் செல்லவோ முடியாத நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு தீர்வொன்றை வழங்குமாறும் அந்தப் பகுதியில் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளை அதிகப்படுத்துமாறும் மக்கள் சார்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.



# இங்கிலாந்து - இந்தியா இரண்டாவது டெஸ்ட் இன்று

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான, இரண்டாவது டெஸ்ட் போட்டி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில், இதற்காக இந்தியக் கிரிக்கெட் அணி தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டது.

இங்கிலாந்து அணியுடனான, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் தோல்வியடைந்ததால், கடும் விமர்சனத்துக்குள்ளாகியுள்ள இந்தியா அணி, தற்போது இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று பதிலடி கொடுக்கும் முனைப்பில் உள்ளது.

எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், இந்திய அணிக்கு வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புகள் இருந்தும் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற துடுப்பாட்டத்தால், இந்தியா அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது. இந்நிலையில், இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி, இன்று லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் முதல் போட்டியில் பெற்ற தோல்விக்கு பதிலடி கொடுக்கும் வகையில், இந்திய அணி, இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அணியில் பல மாற்றங்களை கொண்டு வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய லோகேஷ் ராகுலை அணியில் இருந்து நீக்கி புஜாராவை உள்வாங்க அணி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

அத்தோடு, சுழற்பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் குல்தீப் யாதவ்வும் அணிக்குள் உள்வாங்கப்படவுள்ளதாக தெரிகின்றது. இதேவேளை, உபாதையில் உள்ள வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ரா, இன்னமும் உடற் தகுதியை எட்டாத காரணத்தால், அவர் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இணைத்துக் கொள்ளப்படமாட்டார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2014ஆம் ஆண்டு இந்தியா அணி, இங்கிலாந்தில் விளையாடும்போது லோர்ட்ஸ் மைதானத்தில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது. இதனால் லோர்ட்ஸில் இந்தியா அணி ஆதிக்கம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது இங்கிலாந்தில் கடும் வெப்பம் நிலவி வருகிறது. இதனால் ஆடுகளத்தில் ஈரப்பதம் குறைந்து காணப்படும். அத்துடன் லோர்ட்ஸ் மைதானம் எப்பொழுதுமே சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். இதனால் இரண்டு அணிகளும் இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் விளையாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மைதானத்தில் இதுவரை 17 டெஸ்ட்களில் இந்தியா அணி விளையாடியுள்ளது. அதில் 2 முறை வென்றுள்ளது. நான்கு டெஸ்ட் போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இங்கிலாந்து அணி 11 முறை வென்றுள்ளது.

இதுதவிர, இதுவரை 13 அணித்தலைவர்கள் தலைமையில் இந்திய அணி லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடியுள்ளது. அதில் 1986ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான இந்தியா அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்திலும், 2014ஆம் ஆண்டு டோனி தலைமையிலான அணி 95 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் வென்றிருந்தது. அந்த வரிசையில் கோஹ்லி தலைமையிலான அணியும் இடம்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# ரோமாவை வீழ்த்தியது ரியல் மட்ரிட்

சர்வதேசசம்பியன்ஸ்கிண்ண உதைபந்தாட்ட தொடரின் ரோமா அணிக்கெதிரான போட்டியில், ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இத்தொடரில் ரியல் மட்ரிட் அணி எதிர்கொள்ளும் இறுதி போட்டி என்பதால், இப்போட்டி இரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்ஸதது. இந்நிலையில் இந்த வெற்றியை ரியல் மட்ரிட் அணி தங்களது இரசிகர்களுக்கு அர்ப்பணித்துள்ளது.

அமெரிக்காவின்நியூஜெர்சியிலுள்ள மெட் லைப் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டியில், ரியல் மட்ரிட் அணி கடும் ஆக்ரோஷமாக விளையாடியது. இதன்பலனாக அந்த அணி போட்டி ஆரம்பமாகி இரண்டாவது நிமி டத்திலேயே கோல் அடித்து அசத்தியது. இந்த கோலை மார்க்கோ அசன்ஷியோ அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து, பதில் கோல் அடிக்க ரோமா அணியினர் முயற்சித்த போதும், அது பலனளிக்கவில்லை. ஆனால் தொடர்ந்து உற்சாகத்துடன் விளையாடிய ரியல் மட்ரிட் அணி, நட்சத்திர வீரர் கரேத் பலேவின் துணையுடன் 15ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தது.

இதன் பிறகு இரு அணிகள் முயற்சித்து கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முற்பாதியில் ரியல் மட்ரிட் அணி 2:0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதிநேரத்தில் இரண்டு அணி வீரர்களும் கோல் அடிக்க முட்டிமோதிக் கொண்டனர். இதன்போது இரு அணிகளினதும் பல கோல் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

ஆனால், 83ஆவது நிமிடத்தில் கெவின் ஸ்டோர்ட்மேன் ரோமா அணிக்காக முதல் கோலை அடித்து ஆறுதல் அளித்தார். மேற்கொண்டு இரு அணிகளால் முயற்சித்தும் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால் போட்டியின் இறுதியில் மட்ரிட் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.



காலைக்கதிர் Kalaikkathir



# தமிழகம் கண்ணீரில் மிதக்க கலைஞரின் இறுதி ஊர்வலம்













# 20,000 பட்டதாரிகளுக்கு 2018 க்குள் அரச நியமனம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக.09

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை 2018ஆம் ஆண்டுக்குள் முன்னெடுக்கத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி முதல் மே மாதம் 5ஆம் திகதி வரை 25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றன. அதில் சுமார் 57 ஆயிரம் பட்டதாரிகள் சமுகமளித்தனர்.

கோரப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் 20 ஆயிரம் பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைத்துக் கொள்ள தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. எனினும் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளித்திட்டத்தில் குறைபாடுகள் உள்ளமையால் வடக்கு மாகாண மாவட்டங்கள் உட்பட நாட்டின் பல மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் பாதிக்கப்படுகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் பட்டதாரிகள் நியமனம் அமைச்சரவையால் இடைநிறுத்தப்பட்டது. இந்த நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் 20 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளை 2018ஆம் ஆண்டுக்குள் முன்னெடுக்கத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)

# கருணாநிதியின் மறைவு; மலையகத்தில் அஞ்சலி

கொழும்பு, ஓக.09

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் தி.மு.கவின் தலைவருமான கருணாநிதியின் மறைவுக்கு, மலையக மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர்.

மலையகத்தின் தோட்டப்பகுதிகளிலுள்ள ஆலயங்களிலும், பொது இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

ஹற்றன், கொட்டகலை, மஸ்கெலியா, பொகவந்தலாவை, நோர்வூட், தலவாக்கலை, அக்கரப்பத்தனை, டயகம போன்ற பகுதிகளிலும் மக்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொட்டகலை பிரதேச சபையின் ஊடாக அதன் தலைவர் இராஜமணி பிரசாத் தலைமையில் நேற்று கருணாநிதியின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது தோட்ட பொது மக்கள், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

# யாழ்.இளைஞரைக் கடத்திக் கொன்ற இராணுவ அதிகாரிகளுக்குத் தூக்கு!

## நீதிபதி இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பு

திருமலை, ஓக 09

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரைச் சட்ட முரணாகக் கைது செய்து அவரைச் சித்திரவதை செய்து கொலை செய்த குற்றத்துக்கு இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் இராணுவச் சிப்பாய் ஆகிய இருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுத் தீர்ப்பளித்தார்.

வழக்கில் முதலாம் எதிரியான இராணுவ அதிகாரி ஒருவர் நிரபராதியாக என விடுதலை செய்யப்பட்டார். கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் 09.09.1998 ஆம் ஆண்டு யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த அன்ரன் குணசேகரம் என்ற இளைஞர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் இரண்டு நாள்களில் சடலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பில் 51 ஆவது முகாம் தளபதி முதலாம் எதிரியாகவும், யாழ்ப்பாணம் 512ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி இரண்டாம் எதிரியாகவும், திருநெல்வேலி இராணுவ முகாம் இராணுவ அதிகாரி மூன்றாம் எதிரியாகவும் பெயர் குறிப்பிடப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் பலரது சாட்சியங்களையும், எதிரி தரப்பு சட்டத்தரணியினது வாதங்களையும் பரிசீலித்த மன்று நேற்று வழக்கின் தீர்ப்புக்காகத் திகதியிட்டிருந்தது.

இதன்படிஇ நேற்று முற்பகல் 11 மணியளவில் நீதிபதி தனது தீர்ப்பைத் திறந்த மன்றில் அறிவித்தார். இலங்கை உயர் நீதிமன்றம் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாகவும், சித்திரவதை தொடர்பான வழக்குகளிலும் வழங்கிய தீர்ப்புக்களையும், ஐ.நா. போர்க்குற்ற நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்புக்களையும் மேற்கோள்காட்டி தனது தண்டனைத் தீர்ப்பை அவர் வழங்கியிருந்தார்.

இந்த வழக்கின் முதலாம் எதிரியான 51ஆவது படைத் தளபதி அச்சுவேலி முகாமைச் சேர்ந்தவர். அவர் அந்த இளைஞனைக் கைது செய்தமை, தடுத்து வைத்தமை என்பனவற்றுடன் மாத்திரமே தொடர்புபட்டுள்ளார். அத்துடன், அவர் சித்திரவதை புரிந்தமை, கொலை செய்தமை என்பனவற்றுடன் தொடர்புபட்டார் என்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இல்லை. எனவே, இந்த வழக்கிலிருந்து அந்த இராணுவ அதிகாரி விடுதலை செய்யப்படுகின்றார்.

மற்றும் முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் ஆதாரங்களூடாகப் பார்க்கின்றபோது இரண்டாம் எதிரியான இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் திருநெல்வேலி இராணுவ முகாம் அதிகாரி ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டானது நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படுகின்றது.

எனவே, இந்த வழக்கில் குற்றவாளிகளாக நிரூபிக்கப்பட்ட 512ஆம் படை பிரிவின் கட்டளைத் தளபதி மற்றும் திருநெல்வேலி இராணுவ அதிகாரி ஆகிய இருவருக்கும் ஜனாதிபதி விரும்பும் நேரத்தில் விரும்பும் இடத்தில் கழுத்தில் சுருக்குக் கயிறிட்டு உடலில் இருந்து உயிர் பிரியும் வரை தூக்கிலிட்டு தண்டனை நிறைவேற்றவேண்டும் என திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.